# வருடாந்த அறிக்கை 2018

---

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

இலக்கம் 428/11ஏ, முதலாவது மாடி,
டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
தொலைபேசி இலக்கம்: +94112879539
தொலைநகல் இலக்கம்: +94112879540
மின்னஞ்சல் முகவரி: witness.protection.srilanka@gmail.com

## உள்ளடக்கம்


- தலைவரின் செய்தி 03
- பணிப்பாளர் நாயகத்தின் செய்தி 04
- தூரநோக்கும் செயற்பணியும் 05
- நிறைவேற்று சுருக்கம் 6-7
- அறிமுகம் 8-9
- குறிக்கோள்கள் 10
- குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளும் உரித்துக்களும் 11-12
- அதிகார சபையின் தொழிற்பாடுகளும் மற்றும் கரும பணிகளும் 13-14
- அதிகார சபையின் அதிகாரத் தத்துவங்களும் மற்றும் பொறுப்புப் பணிகளும் 15
- பொலிஸ் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு 16
- முகாமைத்துவ சபை - 2018 17
- பதவியணி பற்றிய விபரம் - 2018 18-21
  - ✓ சிரேஷ்ட முகாமைத்துவ சபை
  - ✓ துணைப் பதவியணி ஊழியர்கள்
    - முகாமைத்துவ உதவியாளர்கள்(தொழில் நுட்பம் சாரா)
    - சாரதிகள்
    - அலுவலக உதவியாட்கள்
    - பதவியணி ஊழியர்கள் பற்றிய சுருக்க விபரம்
- செயலாற்றுகை பற்றிய அறிக்கை 22-27
- கொள்கை மற்றும் சட்டம் சார் மறுசீரமைப்புகள் 28
- நிதி முன்னேற்றம் (இறுதிக் கணக்குகள்) 29-46
- கணக்காய்வு அறிக்கை

**தலைவரின் செய்தி**



கடந்த காலத்தில் இலங்கையில் குற்றங்களுக்கு எதிராக சட்ட நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொறிமுறை அடிப்படை ரீதியில் தண்டனை வழங்கும் நோக்கில் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த பொறிமுறை குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் நிவாரணத்தை வழங்குவதிலும் மற்றும் அவர்களை மீட்டெடுத்து பாதுகாப்பதிலும் போதியளவில் கவனம் செலுத்தவில்லை. ஆகையால்தான், குற்றத்தால் பலியாகிய மக்களுக்கு குற்றத்திற்கு எதிராக சட்ட நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் பொறிமுறையில் இணைந்து செயல்பட்ட நேரத்தில் எம்மால் பெருமளவு கஷ்டங்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது. நீதிமன்றப் பொறிமுறை மற்றும் ஏனைய உரிய பொறிமுறைகள் ஆகியவற்றினுள் அத்தகைய மக்கள் மறுபடியும் மீள்பாதிப்புக்கு ஆளாக்கப்படுதல், குற்றவாளிகளினால் ஏற்படுத்தப்படும் அழுத்தம், பாதிப்புகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றின் காரணமாக, குற்றத்திற்கு எதிராக சட்ட நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கும் இந்த பொறிமுறையில் மக்கள் தமது நம்பிக்கையை இழந்திருந்தனர். குறித்த இத்தகைய காரணங்களின் அடிப்படையில், குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் உரித்துக்களையும் பாதுகாப்பதற்கான முறையான ஒரு வேலைத் திட்டத்தினது அவசியத்தில் 2005 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் கவனம் திரும்பியது. இது தொடர்பாக சர்வதேச ரீதியிலும் கூட கவனம் செலுத்தப்பட்டிருப்பது மேலும் ஒரு விஷேட அம்சமாக காணப்பட்டது. ஆகையால் 2005 ஆம் ஆண்டில், குற்றதால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கு என புதிய ஒரு சட்டக் கோட்பாட்டு நிலையை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. குற்றத்தால் பலியானவர்கள் பற்றிய தேசிய நிலையமும் மற்றும் தேசிய சட்ட ஆணைக்குழுவும் இதற்கு முன்வந்து செயற்பட்டன. இந்தப் புதிய சட்டத்தை தயாரித்த போது சட்டமா அதிபரினது திணைக்களம் நல்கிய ஒத்துழைப்பையும் குறிப்பாக நான் நினைவுகூற விரும்புகின்றேன். இத்தகைய சகல கரும பணிகளினதும் பயனாக 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி, 2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பது பற்றிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமையானது இலங்கையின் சட்ட வரலாற்றில் மிக முக்கிய ஒரு மைல்லாகும் என இத்தருனத்தில் நான் பெரும் மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன். இந்தப் புதிய சட்டம், இலங்கையின் சட்ட முறைமையினுள் காணப்படுகின்ற குற்றத்தால் பலியான மக்களுக்கு சட்ட நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதில் காணப்பட்ட பெரும் இடைவெளியை நிரப்பும் என நான் நம்புகின்றேன். 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி எமது அதிகார சபை முன்னாள் ஜனாதிபதி அவர்களினால் வைபவ ரீதியில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் நீதி அமைச்சரின் அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு அதிகார சபையாக 1967/8 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆரம்ப காலத்தில் அதாவது 2016, 2017 ஆம் ஆண்டுகளில் புதிய ஒரு அதிகார சபையாக தாபிக்கப்பட்ட நேரத்தில் முகம்கொடுப்பதற்கு நேரிட்ட பல கஷ்டங்கள் காரணமாக ஒரு பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும், 2018 ஆம் ஆண்டில் எமது சேவைகளை வினைத்திறன் வாய்ந்ததாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் மேற்கொள்ளும் வகையில் ஒரு அத்திவாரத்தை இடுவதற்கு முடிந்தமை எமக்கு கிடைத்த பெரும் பாக்கியம் என நான் கருதுகின்றேன்.

இந்தப் புதிய சட்டத்தினால் எதிர்பார்க்கப்படுகின்ற தொழிற்பாடுகளையும் கரும பணிகளையும் நிறைவேற்றும் நிமித்தம் தாபிக்கப்பட்ட குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை மற்றும் குற்றத்தால் பலியானவர்களினது உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு ஆகியன ஏற்கெனவே மிகவும்

துல்லியமாக செயல்பட்டு வருகின்றன. மேலும், இத்தகைய விழிப்பூட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களை நாடளாவிய ரீதியில் மேற்கொள்வதற்கும் மற்றும் நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து வழங்கப்பட்ட நிதி உதவியையும் நான் இங்கு பெரிதும் மதித்து நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். அதே போலவே எமது அதிகார சபையின் கட்டமைப்பு சார்ந்த சூழலை உருவாக்குவதற்கும் மற்றும் பேணிச் செல்வதற்கும் என நல்கப்படும் அரச பங்களிப்பையும் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் நினைவுகூற விரும்புகின்றேன்.

எமது இந்த தேசிய அதிகார சபை குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாக்கும் நிமித்தம் முற்றிலும் உதவுகின்ற தென் கிழக்கு ஆசியாவில் காணப்படும் ஒரேயொரு நிறுவனமாக விளங்குவதும் அதே போல் சர்வதேச ரீதியில் எமக்கு கிடைத்த நன் மதிப்பும் நாம் பெற்ற விஷேட வெற்றியாகும் என பெரும் மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன். இந்த எமது அதிகார சபையை குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பது தொடர்பில் தெற்காசியாவிலுள்ள மிகச் சிறந்த ஒரு நிறுவனமாக ஆக்குவதே எனது ஒட்டுமொத்த நோக்கமாகும்.

குற்றத்தால் பாலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான ஓர் நாடாக இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கில், இந்தக் குற்றத்தால் பாதிக்கப் பட்டவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான அதிகார சபை பயணிக்கின்ற தனது பணயத்தில் அணிதிரண்டுள்ள முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், பணிப்பாளர் நாயகம் அடங்கலாக இந்த சபையினது ஊழியர்களையும் மிகவும் கௌரவத்துடன் நினைவு கூறுவதோடு, 2018 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தொடர்பில் இந்த செய்தியை விடுக்க எனக்கு கிடைத்தமையை நான் பெரும் பாக்கியம் என கருதுகின்றேன்.

சுகத கே. கமலத்
தலைவர்

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



குற்றத்தால் பாலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் வருடாந்த அறிக்கைக்கு இந்த குறுகிய செய்தியை விடுப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். 2018 ஆம் ஆண்டில் இந்த அதிகார சபையின் முக்கிய குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் இலக்குக்கு உயிரூட்டும் நிமித்தம் இந்த சந்தர்ப்பத்தை ஒரு விஷேட சந்தர்ப்பமாக ஆக்கிக் கொள்கின்றேன்.

குற்றத்தால் பாலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதையடுத்து கழிந்து சென்ற மூன்று வருட குறுகிய காலப் பகுதியினுள் கணிசமான முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது என்பதை கூற வேண்டியுள்ளது. 2018 ஆம் ஆண்டு அத்தகைய ஆண்டுகளுக்கு இடையில் ஒரு விஷேட ஆண்டாக விளங்குகின்றது. 2018 ஆம் ஆண்டளவில் எமது அதிகார சபையின் பதவியணி ஊழியர்களின் எண்ணிக்கையை 31 வரை அதிகரிக்க முடிந்தது. பணிப்பாளர் (நிதி), உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) மற்றும் சாரதி ஆகிய 03 பதவிகளுக்கு இந்த ஆண்டினுள் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதற்கு இணையாக எமது அதிகார சபையின் பதவியணி ஊழியர்களினது திறன்களை விருத்தி செய்யும் நிமித்தம் அந்தந்த துறைகளில் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஊழியர்களை அனுப்பி வைக்க முடிந்தமையும் எமது அதிகார சபையின் வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது.

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் எமது அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை முறையே 14 மற்றும் 49 என காணப்பட்டன. 2018 ஆம் ஆண்டினுள் அத்தகைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 86 வரை அதிகரித்துள்ளன. இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 76% வீதமான அதிகரிப்பை சுட்டிக் காட்டுகின்றது. முறைப்பாடுகள் பற்றிய விசாரணை நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளல் மற்றும் குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பான புதிய சட்டம் பற்றி நாடு முழுதிலும் மேற்கொள்ளப்பட்ட விழிப்பூட்டும் செயற்பாடு இதற்கு காரணமாக அமைந்தது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேன்.

2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினது நிதியத்தின் மூலம் (UNDP) எமது அதிகார சபையுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட நாற்பது (40) மில்லியன் ரூபா மானியத்தையும் இங்கு விஷேடமாக குறிப்பிட வேண்டியுள்ளது. அந்த நிதியை பயன்படுத்தி நாடு முழுதிலுமுள்ள சகல பொலிஸ் நிலை பொறுப்பு அதிகாரிகள், சட்ட மருத்துவ அதிகாரிகள், சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் ஆகியோர் உள்ளடங்கும் வகையில் 14 வேலையரங்குகள் 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டுள்ளன. அதே போல் எமது அதிகார சபையின் அலுவலக வளாகத்தை மேம்படுத்தல், எமது அதிகார சபைக்கு தேவையான தகவல் தொழில் நுட்ப பொதிகளை கொள்வனவு செய்தல், பொது மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேவையான கட்புல செவிப்புல பொதிகளை கொள்வனவு செய்தல், எமது அதிகார சபையின் நூலகம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றுக்கு தேவையான நூல்களை கொள்வனவு செய்தல் அடங்கலாக எமது அதிகார சபையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அந்த மானிய நிதியை பயன்படுத்த முடிந்தமையும் அதிகார சபைக்கு கிடைத்த ஒரு விஷேட வெற்றியாகும். மேலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, சட்ட உதவி ஆணைக்குழு (Legal Aid Commission), ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் நிதியம் (United Nations Children's Fund), ட்ரான்ஸ்பேரென்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் (Transparency International), ஆசிய பிராந்தியத்தின் குற்றத்தால் பலியானவர்களுக்கான உதவி வலையமைப்பு (Victim Support Asia) போன்ற உள்நாட்டு நிறுவனங்களுடனும் மற்றும்

வெளிநாட்டு நிறுவனங்களுடனும் இணைந்து செயற்பட்டதன் மூலமாக எமது அதிகார சபையினால் அதன் அபிலாஷைகளை நிறைவேற்ற முடிந்தமையை நான் மதிக்கின்றேன்.

குற்றத்தால் பலியானவர்களும் மற்றும் சாட்சியாளர்களும் அச்சமின்ற தமது உரிமைகளை பாதுகாத்து சட்டத்தின் இறைமை உறுதிசெய்யப்படும் வகையில் சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு தேவையான பாதுகாப்பையும் மற்றும் உதவியையும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஒரு ஜனநாயக சமூகத்தின் சிறப்பம்சத்தை மேம்படுத்துவது எமது அதிகார சபையின் எதிர்பார்ப்பாகும். அதன் நிமித்தம் உச்சளவான பங்களிப்பை நல்குவதற்கு நாம் எதிர்காலத்திலும் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்பதை இங்கு விஷேடமாக குறிப்பிடுவதற்கு விரும்புகின்றோம்.

உதயகுமார அமரசிங்க
பணிப்பாளர் நாயகம்

## ✓ தூரநோக்கு

**குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான ஒரு நாடாக இலங்கையை கட்டியெழுப்புதல்**

## ✓செயற்பணி

**குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் பாதுகாத்தல், அவற்றை ஊக்குவித்தல், செயல் வலுப்பெறச் செய்தல் மற்றும் செயற்படுத்துதல்**

# நிறைவேற்று சுருக்கம்

2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்தி 2016 ஆம் ஆண்டு முதல் குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை இலக்கம் 428/11, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்தின் முதலாம் மாடியில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபை உத்தியோகபூர்வமாக தேர்ந்தெடுக்கப்படும் ஏழு உறுப்பினர்களையும் (7) மற்றும் சனாதிபயின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து உறுப்பினர்களையும் கொண்டதாகும். மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் மூலம் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற சொலிசிற்றர் ஜென்ரால் ஜனாதிபதி சட்டத்தரனி சுகத கே. கமலத் அவர்கள் இந்த அதிகார சபையின் தலவைராக பணியாற்றுகின்றார்.

இந்த அதிகார சபைக்கு அனுமதிக்கப்பட்ட 54 ஊழியர்கள் அடங்கிய ஆளணிக்கு 2017 ஆம் ஆண்டின் போது 26 அலுவலர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 2018 ஆம் ஆண்டளவில் அந்த எண்ணிக்கையை 31 வரை அதிகரித்துக் கொண்டு, அதில் பணிப்பாளர் (நிதி), உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) மற்றும் சாரதி ஆகிய 03 பதவிகளுக்கு அலுவலர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அது மட்டுமன்றி இந்த அதிகார சபையின் ஊழியர்களினது திறன்களை அபிவிருத்தி செய்யும் நிமித்தம் உரிய துறைகளில் திறன்கள் அபிவிருத்தி பற்றிய வேலையரங்குகளுக்காக ஊழியர்கள் அனுப்பப்பட்டனர். விஷேடமாக, நீதி அமைச்சுக்கு உட்பட்டிருக்கும் புதிய நிறுவனம் என்ற வகையிலும், இந்த அதிகார சபையினது பல பிரிவுகளினதும் நாளாந்த செயற்பாடுகளை நிறைவேற்றும் நிமித்தம் தேவையான விடயங்கள் பற்றிய அறிவு அதே போன்று அதிகார சபையின் இந்த விடயப் பரப்புக்குரிய தெற்காசியாவில் தாபிக்கப்பட்ட முதலாவது நிறுவனம் என்ற வகையிலும் தொழில் நுட்பம் பற்றியும் மற்றும் உள்நாட்டு, சர்வதேச முறையியல்கள் பற்றியும் அறிந்து கொள்வது அவசியம் என்பதால் இந்த வேலையரங்குகளிலும் மற்றும் மாநாட்டுக் கரத்தரங்குகளிலும் அலுவலர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டனர்.

மேலும், எமது அதிகார சபைக்கு இருக்கின்ற இடவசதிகளின் அளவை சமாளித்து, அந்த ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட சகல அலுவலர்களுக்கும் அதே போல் அப்போது பணியாற்றிய அலுவலர்களுக்கும் அலுவலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு அவர்களின் தத்தமது கரும பணிகளை இலகுவாக நிறைவேற்றுவதற்கு தேவையான அலுவலக உபகரணங்களும் மற்றும் இடவசதிகளும் வேறாக்கி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டு 24 முகாமைத்துவ சபைக் கூட்டங்களும், 01 விஷேட முகாமைத்துவ சபைக் கூட்டமும், நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் 06 கூட்டங்களும், 02 தடவை கணக்காய்வுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

2018 ஆம் ஆண்டு இந்த அதிகார சபைக்கு 86 எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. இந்த எண்ணிக்கையை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 76% வீதமான ஒரு அதிகரிப்பை சுட்டிக் காட்டுகின்றது. 2018 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் 24 முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்யப்பட்டு அத்தகைய முறைப்பாடுகள் நிறைவு செய்யப்பட்டன. அதே போன்று அந்தக் காலப் பகுதியினுள் 5 முறைப்பாடுகள் தொடர்பில் பாதுகாப்புகள் வழங்கப்பட்டன. மேலும் அத்தகைய 11 முறைப்பாடுகள் ஏனைய நிறுவனங்களுக்கு குறிப்பீடு செய்யப்பட்டிருந்தன. 38 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. 03 முறைப்பாடுகள் தொடர்பான கோவைகள் மூடப்பட்டன.

2018 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிதியத்துடன் (UNDP) செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு ஏற்ப கிடைத்த 40 மில்லியன் ரூபா நிதியேற்பாட்டில், எமது அதிகார சபையின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் நிமித்தம், பிரதானமாக நாட்டின் சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், சட்ட மருத்துவ அதிகாரிகள், சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட அலுவலர்கள் மற்றும் சிறைச்சாலைகளின் ஆணையாளர்கள் மற்றும் சிறைச்சாலை அத்தியட்சகர்கள் ஆகியோரை வழிப்பூட்டும் மற்றும் உணரச் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் நடத்தப்பட்டன. அத்தகைய தரப்புகளின் நிமித்தம் சுமார் அத்தகைய 14 வேலையரங்குகள் நடத்தப்பட்டன. குறிப்பாக நாடு முழுதிலும் காணப்படுகின்ற 492 பொலிஸ் நிலையங்கள் உள்ளடங்கும் வகையில் மாகாண மட்டத்தில் சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளையும் விழிபூட்டவும் மற்றும் உணரச் செய்யவும் முடிந்தது. அதனூடாக எமது அதிகார சபைக்குரிய குறித்த சட்டத்தை செயல் வலுப்பெறச் செய்து நடைமுறைப்படுத்தும் செயல் நடவடிக்கையில் நேரடியாக பங்களிப்பு செய்கின்ற தரப்புகளுக்கு என பல விஷேட விரிவுரைகளும் எமது அதிகார சபையினது முகாமைத்துவ சபையின் கல்விமான்களினால் நிகழ்த்தப்பட்டன. நடத்தப்பட்ட இந்த சகல நிகழ்ச்சித் திட்டங்களின் போதும் எமது அதிகார சபையினது தொழில் நுட்ப செயற்பாடுகள் தொடர்பான கைந்நூல்களும் மற்றும் சுருக்கக் கையேடுகளும் மற்றும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் (Transparency International) நிறுவனம் வழங்கிய கைந்நூல்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மேலும், 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, சட்ட உதவி ஆணைக்குழு (Legal Aid Commission), ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட அலுவலகம் (United Nations Development Programme), ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் நிதியம் (United Nations Children's Fund), ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் (Transparency International) நிறுவனம், ஆசிய பிராந்திய குற்றத்தால் பலியானவர்களுக்கான உதவி வலையமைப்பு (Victim Support Asia) முதலிய வெளிநாட்டு நிறுவனங்களுடனும் மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுடனும் உறவுகளை பேண முடிந்தது. மேலும், நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான மன்றக் (Dorner Forum) கூட்டத்தில் இந்த அதிகார சபையின் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

அதே போல் குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உதவி தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர்கள், இந்த அதிகார சபையினதும் பொலிஸ் பாதுகாப்புப் பிரிவினதும்

உயர் அதிகாரிகள் ஆகியோர் இந்த சட்டம் தொடர்பான எதிர்கால வேலைத் திட்டங்கள் பற்றிய ஒரு விஷேட வேலையரங்கை நடத்தினர். இதன் போது குற்றத்தால் பலியானவர்களினதும் சாட்சியாளர்களினதும் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கும் மற்றும் எமது அதிகார சபைக்கும் இடையில் காணப்படுகின்ற தொடர்புகள் உறுதியாகும் விடயங்களில் விஷேட கவனம் செலுத்தப்பட்டது.

எமது அதிகார சபைக்கு தேவையான தகவல் தொழில் நுட்பப் பொதிகள் அதாவது லெப்டொப் கணனிகள், அச்சீட்டு இயந்திரங்கள், புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரங்கள் மற்றும் கெமராக்கள் என்பன அடங்கலாக ஒரு நிறுவனத்திற்கு தேவையான பல உபகரண வசதிகளை ஐக்கிய நாடுகள் அமைப்பினது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி உதவியின் மூலமாக 2018 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ள முடிந்தது.

எமது அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டு அது அதன் ஆரம்ப நிலையிலுள்ளதால் பொது மக்களை விழிப்பூட்டுவது தொடர்பான விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேவையான கட்புல மற்றும் செவிப்புல சாதனப் பொதிகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் கைந்நூல்கள் என்பன ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் நிதியேற்பாடுகளிலிருந்து கிடைத்தன. இதன் போது நிறுவனத்தின் உயர் அதிகாரிகளினது உதவிகளுக்கும் அதே போல் UNDP நிறுவனத்தின் நிதி சார்ந்த உதவிகளுக்கும் மேலதிகமாக தொழில் நுட்ப உதவிகளும் கிடைத்தன.

அதே போல் UNDP திட்ட நிதியின் கீழ் இந்த அதிகார சபையின் நூலகம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்பவற்றுக்கு புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அரசாங்கத்தின் 90% வீத மீண்டெழும் செலவினத்தையும் அதே போல் அரசாங்கத்தின் 61% மூலதன செலவினத்தையும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிதியம் வழங்கிய நிதியேற்பாட்டின் 86% செலவினத்தையும் 2018 ஆம் ஆண்டில் அடைந்த நிதி முன்னேற்றமாக குறிப்பிடலாம்.

# அறிமுகம்

குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாக்கும் நிமித்தம் முறையான ஒரு சட்டக் கட்டமைப்பையும் மற்றும் ஒரு வேலைத் திட்டத்தையும் அறிமுகப் படுத்தி குற்றத்திற்கு எதிராக சட்ட நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் பொறிமுறையை வலுப்படுத்தும் பொருட்டு பாராளுமன்றத்தின் மூலம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட 2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பது தொடர்பான சட்டத்தின் கீழ், குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபை தாபிக்கப் பட்டுள்ளது. இந்த அதிகார சபை இலக்கம் 428/1ஏ, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் ஏறக்குறைய 2800 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு கட்டிடத்தினுள் தாபிக்கப்பட்டுள்ளது. மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் மூலம் 2016.01.08 ஆம் திகதி இந்த அதிகார சபை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர், 1966/02 ஆம் இலக்க 2016.05.09 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் குறித்த இந்த அதிகார சபை அரசியலமைப்பின் 43(2) ஆம் உறுப்புரையின் கீழ் 2016.04.27 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறும் வகையில் கௌரவ நீதி அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய, நீதி அமைச்சரின் மூலம் 1967/08 ஆம் இலக்க 2016.05.16 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட குறித்த அறிவித்தலின் ஊடாக 2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பிரிவுகளும் 2016.05.18 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறும் வகையில் செயற்படுத்தப் பட்டுள்ளன.

குறித்த சட்டத்தின் 12 (ஆ) பிரிவின் பிரகாரம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் 2016.08.11 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறக் கூடிய வகையில் இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டுள்ளது. இந்த முகாமைத்துவ சபை நீதி அமைச்சின் செயலாளர், பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான விடய அமைச்சரின் செயலாளர், மகளிர் விவகாரங்கள் மற்றும் சிறுவர் விவகாரகள் ஆகியவற்றுக்கு பொறுப்பான விடய அமைச்சர்களின் அமைச்சுக்களினது செயலாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், மற்றும் சட்டமா அதிபரின் பிரதிநிதி ஒருவர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர் பதவியை வகிக்கும், பொலிஸ் மா அதிபரின் பிரதிநிதி ஒருவர் அடங்கலாக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுகின்ற ஏழு (7) உறுப்பினர்களையும் மற்றும் குற்றவியல், குற்றத்திற்கான சட்ட நிவாரண முறைமை, மனித உரிமைகள் ஊக்குவிப்பு மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு அல்லது மருத்துவ விஞ்ஞான அல்லது அதனுடன் தொடர்புடைய தொழில் பிரிவுகளில் கல்வி அல்லது தொழில் தகைமைகள் பெற்ற அனுபவமுடைய நபர்பகளுக்கு இடையிலிருந்து மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் மூலம் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களையும் கொண்டமைந்ததாகும். மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின்

மூலம், குறித்த சபைக்கு நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவரான சொலிசிற்றர் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரனி சுகத கமலத் அவர்கள் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறும் வகையில் இந்த அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள்.

**குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் பின்வருமாறு காணப்படும்.**

**(குறித்த சட்டத்தின் (2) ஆம் பிரிவு)**

1. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் குறிப்பீடு செய்தல், உறுதி செய்தல் மற்றும் செயற்படுத்தப் படுதல், அத்தகைய உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் ஊக்குவித்தல், அவற்றைப் பாதுகாத்தல், செயல் வலுப்பெறச் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் என்பவற்றின் நிமித்தம் தேவையான ஒரு பொறிமுறையை தயாரித்தல்.
2. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவியையும் மற்றும் பாதுகாப்பையும் பெற்றுக் கொடுத்தல்.
3. குற்றத்தால் பலியானவர்களுக்கு குற்றம் செய்ததால் குற்றவாளியாக காணப்படும் நபர்களிடமிருந்து குற்றத்தால் பலியானவர்களுக்கு நஷ்டஈடுகளை பெற்றுக் கொடுக்க ஆவணம் செய்தல்.
4. சீர்திருத்தம், நஷ்டஈடு, மீளளிப்பு மற்றும் புனர்வாழ்வு என்பன அடங்கலாக குற்றத்தால் பலியானவர்களுக்கு உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வழங்குதல்.
5. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் மேம்படுத்தும் பொருட்டு, அரச சட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் அரச ஊழியர்கள் ஆகியோரின் கரும பணிகளையும் கடமைகளையும் மற்றும் பொறுப்புக்களையும் குறிப்பீடு செய்தல்.
6. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் எதிராக புரியப்படக் கூடிய குற்றங்களை குறிப்பீடு செய்தல் மற்றும் அத்தகைய குற்றங்களை புரிகின்ற நபர்களுக்கு எதிராக விதிக்கக் கூடிய தண்டனைகளை நிர்ணயித்தல்.
7. குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பது பற்றிய சிறந்த கொள்கைகளை ஏற்றுக் கொள்ளச் செய்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்.

**குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகள் மற்றும் உரித்துக்கள் மற்றும் குற்றத்தால் பலியானவர் ஒருவருக்கு இருக்கின்ற உரிமைகள் (<u>குறித்த சட்டத்தின் (3) ஆம் பிரிவு</u>)**

1. சமனாகவும் மற்றும் நியாயமாகவும் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் கௌரவமும் மற்றும் தனித்துவமும் மதிக்கப்படச் செய்வதற்கான (3 (1) (அ) பிரிவு)
2. குற்றத்தால் பலியானவர் சிறுவர் ஒருவராக இருக்கும் பட்சத்தில் அவரின் அதிகபட்ச நலன்கள் உறுதிப்படுத்தப்படுவதை கருத்திற் கொள்ளச் செய்வதற்கான (3 (1) (ஆ) பிரிவு)
3. குற்றத்தால் பலியானவர் என்ற ரீதியில் ஏதாவது ஒரு நட்டம் ஏற்பட்டிருப்பின், அதன் நிமித்தம் தாமதியாமல் பொருத்தமான ஒரு நிவாரணத்தை பெற்றுக் கொள்வதற்கான (3 (1) (அ) பிரிவு)
4. உளவியல் அல்லது உடலியல் ரீதியில் ஏதாவது துன்புறுத்தல்கள் நிகழ்ந்திருப்பின், அதற்கான மருத்துவ சிகிச்சையை பெற்றுக் கொள்வதற்கான (3 (1) (ஓ) பிரிவு)
5. அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள் என்பவற்றிலிருந்து உரிய முறையில் பாதுகாப்பு பெறுவதற்கான (3 (1) (அ) பிரிவு)
6. குற்றத்தால் பலியானவர் வேண்டுகோள் விடுத்துள்ள சந்தர்ப்பத்தில், இந்த அதிகார சபையின் மூலம் அல்லது உதவிப் பிரிவு மூலம் சட்ட நிலவரம் பற்றி அறிந்து கொள்வதற்கும், முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் பற்றி அறிந்து கொள்வதற்கும், நீதிமன்ற நடவடிக்கைகளினது முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்வதற்கும், தேவையான மருத்துவ, சமூக சேவைகளையும் மற்றும் ஏனைய சேவைகளையும் பற்றி அறிந்து கொள்வதற்குமான (3 (1) (ஜ) பிரிவு)
7. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு முறைப்பாட்டை பதிந்து கொள்வதற்கும் மற்றும் அந்த முறைப்பாட்டை முழுமையாக விசாரணை செய்து கொள்வதற்குமான (3 (1) (உ) பிரிவு)
8. உரிய குற்றம் தொடர்பில் பல விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்ற காலப் பகுதியினுள் உரிய சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அலுவலர் ஒருவர் முன்னிலையில் சட்டத்தரனி ஒருவர் மூலமாக தோன்றி விடயங்களை சமர்ப்பிப்பதற்கான (3 (1) (ஊ) பிரிவு)
9. பொலிஸ் மூலம் நீதிவான் நீதிமன்றத்திற்கு கோவையிடப்பட வேண்டிய அறிக்கைகளின் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கான (3 (1) (எ) பிரிவு)
10. குற்றத்தால் பலியானவருக்கு எதிராக புரியப்பட்டுள்ள குற்றம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளை தொடர்வதற்கு முன்னரும் மற்றும் வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டு அத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் காலப் பகுதியிலும் சட்டமா அதிபர் அவர்களிடம் விடயங்களை சமர்ப்பிக்கும் பொருட்டு சட்டத்தரனி ஒருவரின் மூலமாக கடிதம் ஒன்றை அனுப்புவதற்கான அல்லது பிரதிநிதியை நியமிப்பதற்கான (3 (1) (ஏ) பிரிவு)
11. உரிய குற்றம் தொடர்பாக விசாரணையை நடத்தும் விசாரணை அதிகாரிக்கு கடிதத்தை அனுப்புவதற்கான அல்லது பிரதிநிதியை நியமிப்பதற்கான மற்றும் அந்தப் பிரதிநிதியினால் பதில்களை பெற்றுக் கொள்வதற்குமான (3 (1) (ஐ) பிரிவு)

12. குற்றத்தைப் புரிந்த நபர் குற்றவாளியாக கணிக்கப்பட்டதன் பின்னர் அவருக்கு எதிரான தண்டனை நிர்ணயிக்கப்படுவதற்கு முன்னர், அந்தக் குற்றம் குற்றத்தால் பலியானவரினது வாழ்க்கையை பாதிக்கும் விதம் பற்றி தானாகவோ அல்லது சட்டத்தரனி ஒருவர் மூலமாகவோ நீதிமன்றத்திற்கு எடுத்துரைப்பதற்கான (3 (1) (ஓ) பிரிவு)
13. குற்றவாளி ஒரு மேன்முறையீட்டை செய்துள்ள அல்லது ஒரு மீளாய்வு கோரலை விடுத்துள்ள ஒரு சந்தர்ப்பத்தில், அந்தக் குற்றம், குற்றத்தால் பலியானவரின் வாழ்க்கையை பாதிக்கும் விதம் பற்றி தானாகவோ அல்லது சட்டத்தரணி ஒருவர் மூலமாகவோ நீதிமன்றத்திற்கு எடுத்துரைப்பதற்கான (3 (1) (ஔ) பிரிவு)
14. குற்றம் புரிந்த நபருக்கு மன்னிப்பு அளிக்கப்படுவதை கருத்திற் கொள்ளும் போது ஒரு தண்டனை குறைக்கப்படுவதை கருத்திற் கொள்ளும் போது அது பற்றிய ஒரு அறிவித்தலை பெறுவதற்கும் மற்றும் அந்தக் குற்றம், குற்றத்தால் பலியானவரின் வாழ்க்கையை பாதிக்கும் விதம் பற்றி தானாகவோ அல்லது சட்டத்தரணி ஒருவர் மூலமாகவோ உரிய அதிகார சபைக்கு எடுத்துரைப்பதற்கான (3 (1) (ට) பிரிவு)

**குற்றத்தால் பலியான ஒருவருக்கு இருக்கின்ற உரிமைகள் (<u>குறித்த சட்டத்தின்</u> (4) <u>ஆம் பிரிவு</u>)**

1. ஏதாவது ஒரு நீதிமன்ற நடவடிக்கைக்காக சமூகமளிப்பதால், குற்றத்திற்கு பலியானவரினால் செலவிடுவதற்கு நேரிடும் செலவுகள் தொடர்பாக நீதிமன்றத்தின் மூலமாக ஏதாவது ஒரு தொகையை பெற்றுக் கொள்வதற்கான (4 (1) பிரிவு)
2. குற்றத்தால் பலியாகுவதால் அனுபவித்த உளவியல் அல்லது உடலியல் பாதிப்புகள் நிமித்தம் பொருத்தமான சிகிச்சைகள், ஆலோசனை சேவைகள் என்பவற்றை அரசாங்கத்திடமிருந்து கோருவதற்கான (4 (2) பிரிவு)
3. அரசாங்கத்தினால் மருத்துவ சிகிச்சையை அல்லது ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள இயலாத ஒரு சந்தர்ப்பத்தில், அத்தகைய தேவையை தனியார் துறையிலிருந்து பெற்றுக் கொள்ளும் நிமித்தம் நீதிமன்றத்தை கோருவதற்கான (4 (3) பிரிவு

**சாட்சியாளர் ஒருவருக்கு இருக்கின்ற உரிமைகள் (<u>குறித்த சட்டத்தின்</u> (5) <u>ஆம் பிரிவு</u>)**

1. சாட்சியாளர் ஒருவரினது கௌரவமும் மற்றும் தனித்துவமும் நியாயமான ஒரு விதத்தில் மதிக்கப்படச் செய்வதற்கான (5 (1) பிரிவு)
2. ஒரு அடிப்படை உரிமை மீறப்படுவது தொடர்பான தகவல்களை வழங்குதல், ஏதாவது ஒரு குற்றம் தொடர்பில் ஒரு விசாரணை நடத்தப்படுகின்ற காலப் பகுதியில் சுயமாக ஒரு கூற்றை வெளிப்படுத்துதல் அல்லது ஏதாவது குற்றம் செய்யப்பட்டமை அல்லது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் ஒரு நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கும் போது சாட்சியாளர் எந்த ஒரு துன்புறுத்தலுக்கும் ஆளாக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை. அந்தத் தன்மையிலான ஒரு துன்புறுத்தலுக்கு எதிராக பாதுகாப்பை பெற்றுக் கொள்ள சாட்சியாளருக்கு உரிமை உண்டு (5 (1) பிரிவு)

**தகவல்களை வழங்கும் நபர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் (குறித்த சட்டத்தின் (6) ஆம் பிரிவு)**

சாட்சியாளராக இருக்கின்ற அல்லது சாட்சியாளராக இருக்காத எவரேனும் நபர் ஒருவர் தனது வேலை செய்யும் இடத்தில் நிகழ்கின்ற ஒரு குற்றம் அல்லது அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் தகவல்களை வழங்குதல், அது தொடர்பில் ஒரு முறைப்பாட்டைச் செய்தல் அல்லது ஒரு நீதிமன்றத்தில் சாட்சி அளித்தல் முதலிய காரணங்களினால் அந்த நபருக்கு நிகழ்த்தப்படும் எந்த ஒரு துன்புறுத்தலுக்கு அல்லது தொழிலில் வேறுபாடு காட்டுவதற்கு எதிராக பாதுகாப்பை பெற்றுக் கொள்வதற்கு உரிமை உண்டு (6 ஆம் பிரிவு)

**நீதிமன்றங்களின் கருமங்களும் மற்றும் பணிகளும்**

**(குறித்த சட்டத்தின் (13) ஆம் பிரிவு)**

1. குற்றத்தால் பலியான நபர்களின் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளிக்கச் செய்தல் மற்றும் ஊக்குவிக்கச் செய்தல்.
2. சாட்சியாளர்களின் உரிமைகளை இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளிக்கச் செய்தல் மற்றும் ஊக்குவிக்கச் செய்தல்.
3. குற்றத்தால் பலியான நபர்களினதும் அது போல் சாட்சியாளர்களினதும் உரிமைகளை பாதுகாத்தல் அல்லது பாதுகாப்பதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.
4. குற்றத்தால் பலியான ஒருவரின் அல்லது சாட்சியாளர் ஒருவரின் ஏதாவது ஒரு உரிமை அல்லது உரித்து மீறப்பட்டுள்ளமை தொடர்பில் கிடைக்கும் ஏதாவது ஒரு முறைப்பாட்டின் அல்லது ஏதாவது தகவல்களின் அடிப்படையில், இந்தச் சட்டத்தின் கீழ் குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் இனங்காணுதல், பாதுகாத்தல் மற்றும் ஊக்குவிக்கப்படுவதை உறுதிசெய்தல் என்பவற்றின் நிமித்தம், புரியப்பட்டது எனக் கூறப்படும் மீறல் தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளச் செய்யுமாறும் அதே போல் அது தொடர்பில் பொருத்தமான சீர்திருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்யுமாறும் உரிய நீதிமன்றத்தைக் கோருதல்.
5. குற்றத்தால் பலியான நபர்களுக்கும் அதே போல் சாட்சியாளர்களுக்கும் தேவையான சிகிச்சைகள், நஷ்டஈடுகள், மீள்தாபிப்புகள் மற்றும் புனர்வாழ்வு அளித்தல் தொடர்பான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன அடங்கலாக தேவையான உதவிகளை வழங்குதல்.
6. குற்றத்தால் பலியான நபர்களுக்கு இந்தச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் மூலம் தாபிக்கப்பட்ட குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் எனக் காணப்படுகின்ற நிதியத்திலிருந்து நஷ்டஈடுகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான ஒரு பொறிமுறைத் திட்டத்தைத் தயாரித்து அதனை அங்கீகரிக்கச் செய்து, செயற்படுத்துதல்.

7. இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் பற்றி பொது மக்களை விழிப்பூட்டுதல்.

8. குறிப்பாக குற்றத்தால் பலியான நபர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பின்வரும் விடயங்கள் தொடர்பில்:

   i. பயனுள்ள பாதுகாப்பு
   ii. தேவையான சிகிச்சைகள், புனர்வாழ்வு மற்றும் ஆலோசனைகள் மற்றும்
   iii. வேறு பொருத்தமான உதவிகளை வழங்கல்

   அடங்கலாக,

   குற்றத்தால் பலியான நபர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் செயல்வலுப் பெறச் செய்யும் நிமித்தம் மேற்கொள்ள வேண்டிய, ஏற்றுக் கொள்ள வேண்டிய அல்லது செயற்படுத்த வேண்டிய பொருத்தமான மற்றும் விஷேடமான நடவடிக்கைகள் தொடர்பில் பொதுவாக அல்லது ஒவ்வொரு சந்தர்ப்பமும் தனித்தனியாக கருத்திற் கொள்ளப்படுதல் எனும் அடிப்படையில், இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கும் மற்றும் வேறு ஏதாவது ஒரு அரச திணைக்களத்திற்கும், நியதிச்சட்ட சபைக்கும் மற்றும் அரச ஊழியர்களுக்கும் அறிவுரைகள் வழங்குதல் மற்றும் சிபாரிசுகளைச் செய்தல்.

9. பல அதிகார சபைகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்ற, தற்பொழுது நடைமுறையிலுள்ள கொள்கைகள் மற்றும் சட்டங்கள் அதே போல் நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியன தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நியமங்களுக்கும் மற்றும் உரிய ஏற்பாடுகளுக்கும் இணங்க உறுதி செய்து கொள்ளும் நிமித்தம் அவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் அத்தகைய மீளாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் சட்ட சார் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளச் செய்தல், திருத்துதல் மற்றும் பிரயோகித்தல் என்பன தொடர்பில் சிபாரிசு செய்தல்.

10. ஏதாவது ஒரு நீதிமன்றத்தின் அல்லது ஒரு ஆணைக்குழுவின் அல்லது வேறு எவரேனும் நபர் ஒருவரின் வேண்டுகோளினது அடிப்படையில், ஒரு சமகால அல்லது மிகவும் சமீபகால கட்புல தொடர்பாடலின் மூலமாக சாட்சிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் சிறந்த செயன்முறைகள் என்பன தொடர்பான தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

11. குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் வயதுகள், பால்நிலை, சமயம், மொழி, கலாசார நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், இன அல்லது குல அல்லது உடலியல் குறைபாடு அல்லது வேறு ஏதாவது காரணங்கள் என்பவற்றின் அடிப்படையில் நிகழக் கூடிய பாதிப்புகளின் விளைவாக குற்றத்தால் பலியான நபர்களுக்கு அல்லது சாட்சியாளர்களுக்கு எழுந்துள்ள தேவைகள் அதே போல் விஷேட குழுக்களில் அடங்கும் குற்றத்தால் பலியான நபர்களுக்கு எழுந்துள்ள விஷேட தேவைகள் முதலிய தேவைகள் பற்றி, இலங்கை பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள், சிறைச்சாலைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், அரச மருத்துவ அதிகாரிகள், நன்னடத்தை மற்றும் சமூக சேவை என்பற்றுடன் சம்பந்தப்படுகின்ற அரச ஊழியர்கள் முதலியோர் அடங்கலாக, சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சம்பந்தப் படுகின்ற அரச ஊழியர்கள் முதலிய தரப்புகளை உணரச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
12. இலங்கை பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், அரச மருத்துவ அதிகாரிகள் மற்றும் அரச சமூக சேவை நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அடங்கலாக, சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சம்பந்தப்படுகின்ற நீதிமன்றங்களினாலும் மற்றும் ஆணைக்குழுக்களினாலும், வேறு ஏதாவது நியாயாதிக்க சபைகளினாலும், அதே போல் அரச ஊழியர்களினாலும் மற்றும் நியதிச்சட்ட சபைகளினது ஊழியர்களினாலும், குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான நிருவாகப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் சிறந்த செயன்முறைகள் என்பவற்றைப் பின்பற்றுதல் மற்றும் ஏற்புடையதாக்கிக் கொள்வதை ஊக்குவித்தல் மற்றும் சிபாரிசு செய்தல்.

**குறித்த சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இந்த தேசிய அதிகார சபையின் அதிகாரத் தத்துவங்களையும் மற்றும் கரும பணிகளையும் கீழே காணப்படுகின்றவாறு சுருக்கமாகக் குறிப்பிட முடியும்.**

- **செயல்வலுப் பெறச் செய்யும் பொறுப்புப் பணி**

  குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் இனங்காணுதல், அவற்றை மதிக்கச் செய்தல், ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் அவை பற்றி விழிப்பூட்டுதல்.

- **அரை நீதிமன்றப் பொறுப்புப் பணிகள்**

  குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்படுதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் விளம்புதல், அந்த மீறுகை தொடர்பாக பொருத்தமான உரிய அரச அதிகாரிகளுக்கும் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் கட்டளையிடுதல்.

- **சேவைகளை வழங்கும் பொறுப்புப் பணி**

  குற்றத்தால் பலியான நபர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பு அளித்தல் மற்றும் உதவுவதற்கான வசதி செய்தல், நஷ்டஈடுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- **ஒழுங்குறுத்தும் பொறுப்புப் பணி**

  முன்னோடியான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் கண்காணிப்புச் செய்தல், குற்றங்கள் நிகழ்வதை குறைக்கக் கூடிய முறைகளும் மற்றும் விதிமுறைகளும் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் ஊக்குவித்தல், குற்றங்களை தடுக்கக் கூடிய கொள்கைகள் பற்றிய சிபாரிசுகளை வழங்குதல்.

# பொலிஸ் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு

2015 இன் 4 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட மற்றொரு விஷேட பிரிவாகிய இந்தத் தேசிய அதிகார சபையின் ஆலோசனையினதும் மற்றும் வழிகாட்டல்களினதும் அடிப்படையில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்ட 'குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் பாதுகாப்பதற்குமான பிரிவு' என அழைக்கப்படும் ஒரு விஷேட பொலிஸ் பிரிவு காணப்படுகின்றது. குறித்த சட்டத்தின் 19 (2) ஆம் பிரிவின் கீழ் முகாமைத்துவ சபைக்கு உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபரின் கண்காணிப்பின் கீழ் பணியாற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் இந்தப் பிரிவுக்கு பொறுப்பாக நியமிக்கப் பட்டுள்ளார். 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதி முதல் இந்தப் பிரிவின் கடமைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தேசிய அதிகார சபையின் மூலம் வழங்கப்படுகின்ற முன்னோடி ஆலோசனைகளை பின்பற்றி குறித்த இந்தப் 'பிரிவு' நிருவகித்துச் செல்லப்படுதல் வேண்டும். குற்றத்தால் பலியான நபர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பை வழங்குதல், அவர்களுக்கும் மற்றும் அவர்களின் சொத்துக்களுக்கும் விளைவிக்கப்படும் அச்சுருத்தல்கள் அதே போல் பாதிப்புகள் என்பன தொடர்பான ஒரு முறைப்பாடு, குற்றம் அல்லது வழங்கப்படும் தகவல்கள் முதலியன தொடர்பில் குறித்த இந்தப் 'பிரிவினாலேயே' பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் உதவியுடன் விசாரணை செய்வது இதன் பொறுப்புப் பணியாகும். இத்தகைய நபர்களுக்கு பாதுகாப்பை வழங்குதல் மற்றும் உதவுதல் ஆகியவற்றின் நிமித்தம் இந்த அதிகார சபை மூலம் வெளியிடும் வழிகாட்டல்களின் அடிப்படையில் வினைத் திறன் வாய்ந்த ரீதியில் நடவடிக்கை எடுக்கும் நிமித்தம் ஏற்பாடுகளை செய்து வழங்க தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

## அதிகார சபையின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

குறித்த சட்டத்தின் பிரகாரம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் நியமித்த உறுப்பினர்கள்:-

1. தலைவர்:- ஜனாதிபதி சட்டத்தரனி சுகத கே. கமலத்
   ஓய்வுபெற்ற சொலிசிற்றர் ஜெனரால்
   சட்டமா அதிபர் திணைக்களம்



2. உதயகுமார அமரசிங்க
   குற்றவியல் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர்
   ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்




3. மருத்துவர் அஜித் தென்னகோன்
   பிரதான சட்ட மருத்துவ அதிகாரி



4. மருத்துவர் நீல் பெர்னாந்து
   விஷேட உளவியல் மருத்துவ நிபுணர்



5. மருத்துவர் ஹிரந்தி விஜேமான்ன
   விஷேட மருத்துவ நிபுணர்



### உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:

1. யசந்த கோதாகொட
   மேலதிக சொலிசிற்றர் ஜெனரால்
   சட்டமா அதிபர் திணைக்களம்



2. எம்.ஆர். லதீப்
   சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்
   பொலிஸ் தலைமை அலவலகம்



3. சட்டத்தரனி எச்.ஜி. ஹுசைன்
   ஆணையாளர்
   மனித உரிமைகள் ஆணைக்குழு



4. சட்டத்தரனி பியுமந்தி பீரிஸ்
   மேலதிகச் செயலாளர் (சட்டம்)
   நீதி அமைச்சு



5. விஜித்தா செனவிரட்ன
   மேலதிகச் செயலாளர்
   சட்டம், சமாதானம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சு



6. திருமதி எல்.ரீ.டீ. பெரேரா
   அவதானிப்பாளர் (திறைசேரியின் பிரதிநிதி)
   நிதி மற்றும் ஊடக அமைச்சு



7. திரு பத்மசிறி ஜயமான்ன
   செயலாளர்
   சட்டம் மற்றும் சமாதானம் பற்றிய அமைச்சு



## 2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் பற்றிய விபரம்

1. திருமதி எல்.ரீ.டீ. பெரேரா - தலைவர்
   பொதுத் திறைசேரியின் பிரதிநிதி

2. திருமதி பியுமந்தி பீரிஸ் - மேலதிகச் செயலாளர்
   நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

3. திரு ஏ.ஜி. ஹுசைன் - ஆணையாளர்
   மனித உரிமைகள் ஆணைக்குழு

4. திருமதி விஜித்தா செனவிரட்ன - மேலதிக செயலாளர்
   சிறுவர் மற்றும் மகளிர் விவகாரங்கள் அமைச்சு

5. திருமதி ஐ.என். பிரியந்தி - பிரதிநிதி, தேசிய கணக்காய்வு அலுவலகம்

## பதவியணி - 2018

- **<u>சிரேஷ்ட முகாமைத்துவ பதவியணி பற்றிய விபரம்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | பணிப்பாளர் நாயம் | - | திரு உதயகுமார அமரசிங்க |
| 2. | பணிப்பாளர் (சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல்) | - | செல்வி எஸ்.எஸ்.கே. கஸ்தூரி ஆராச்சி |
| 3. | பணிப்பாளர் (கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்) | - | திரு ஐ. சிறிவர்த்தன |
| 4. | பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்) | - | திரு டப்ளியூ.ஜி.என். பெர்னாந்து |
| 5. | பணிப்பாளர் (நிதி) | - | திருமதி ஜி.டீ.ஆர். பெரேரா |
| 6. | உதவிப் பணிப்பாளர் (நிதி) | - | திருமதி ஆர்.ஏ.டீ. சமிலா திஸானி |
| 7. | உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | - | திருமதி பி.என்.யூ. பட்டிஆராச்சி |
| 8. | உதவிப் பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்) | - | திரு டப்ளியூ.எம். அஜித் பண்டார |
| 9. | முகாமைத்துவ சபையின் செயலாளர் | - | திருமதி பீ.ஜி.எம்.எஸ்.ஆர்.டப்ளியூ. குணவர்த்தன |

- **<u>இரண்டாம்நிலை பதவியணி பற்றிய விபரம்</u>**

**முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில் நுட்பம் சாராத) - 10**

1. திரு சஹன் ஹர்ஷன அத்துகோரள
2. திருமதி எஸ்.என்.எச். நதீஷா மதுமாலி நாணயக்கார
3. செல்வி பி.ஏ. திலினி தர்ஷிகா பெரேரா
4. திருமதி எம்.பி. சவித்ரா தூளாஷனி குணசேக்கர
5. செல்வி ஐ.ஏ. ஹர்ஷனி இலேபெரும
6. திரு தர்ஷன் ரஜீவ் ஜயமனி
7. செல்வி உமேஷா ஹஷினி லொக்குசூரிய
8. செல்வி ஏ.வி.டீ.என்.சி. ஜயனி செனவிரட்ன
9. திருமதி ஹன்ஷனி எரங்கா முணசிங்க
10. திருமதி கே.டீ. அயேஷா கித்மினி பெர்னாந்து

- **<u>ஆரம்பநிலை பதவியணி பற்றிய விபரம்</u>**

**சாரதிகள்**

**சாரதிகளின் எண்ணிக்கை - 06**

1. திரு யூ.டப்ளியூ. விமங்க பெத்தும்
2. திரு டீ.எம். சம்பத் நிசாந்த பண்டார
3. திரு ஏ. பிரபாத் நிசாந்த
4. திரு எஸ்.பீ. பாக்கிய பிரதீப் மதுசங்க
5. திரு கே. கசுன் மதுஷான் விமுக்தி
6. திரு எஸ். காமினி விஜேகுமார

## அலுவலக உதவியாட்கள்

## அலுவலக உதவியாட்களின் எண்ணிக்கை - 06

1 . செல்வி நதீஷானி பெர்னாந்து

2. திருமதி ஜே.ஜி. சாமலி மல்காந்தி விஜேவிக்ரம

3. திரு டப்ளியூ.எம். விமல புத்திக்க

4. திரு ஏ.ஏ. பிரதீப் குமார பெரேரா

5. திருமதி டப்ளியூ.எச்.ஆர். மதுகா பிரபோதனி


6. திரு கசுன் மதுசங்க யக்குபிட்டிய

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் பதவியணி பற்றிய சுருக்க விபரம் - 2018/12/31

### அட்டவணை 01

| வகுதி | சம்பளக் குறியீடு | மு.சே.தி. அனுமதித்த ஆளணி | தற்போதுள்ள பதவியணி | நிலவும் வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| ***சிரேஷ்ட நிலை*** | | | | |
| பணிப்பாளர் நாயகம் | HM 2-3 | 1 | 1 | 0 |
| பணிப்பாளர் | HM 1-3 | 5 | 4 | 1 |
| உதவிப் பணிப்பாளர் | MM 1-3 | 3 | 3 | 0 |
| முகாமைத்துவ சபையின் செயலாளர் | MM 1-3 | 1 | 1 | 0 |
| ***மூன்றாம் நிலை*** | | | | |
| சட்ட உத்தியோகத்தர் | JM 1-1 | 2 | 0 | 2 |
| உள்ளகக் கணக்காய்வாளர் | JM 1-1 | 1 | 0 | 1 |
| விசாரணை உத்தியோகத்தர் | MA 4 | 6 | 0 | 6 |
| அரவணைப்பு உத்தியோகத்தர் | MA 4 | 10 | 0 | 10 |
| தொடர்பாடல் உத்தியோகத்தர் | MA 4 | 1 | 0 | 1 |
| தகவல் உத்தியோகத்தர் | MA 4 | 1 | 0 | 1 |
| மொழி பெயர்ப்பாளர் | MA 4 | 1 | 0 | 1 |
| ***இரண்டாம் நிலை*** | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில் நுட்பம் சாராத) | MA 1-1 | 10 | 10 | 0 |
| ***ஆரம்ப நிலை*** | | | | |
| சாரதி | PL 3 | 6 | 6 | 0 |
| அலுவலக உதவியாள் | PL 1 | 6 | 6 | 0 |
| **மொத்தம்** | | **54** | **31** | **23** |

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபைக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதித்த ஆளணி பற்றிய விபரம்



# செயலாற்றுகை

# நிருவாக மற்றும் முகாமைத்துவ பிரிவு

இந்த அதிகார சபையின் தற்போதைய பதவியணியினது திறன்களை விருத்தி செய்யும் முகமாக பல திறன்கள் அபிவிருத்தி வேலையரங்குகளுக்கு ஊழியர்கள் 2018 ஆம் ஆண்டில் அனுப்பி வைக்கப்பட்டனர். திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் வேலையரங்குகள் பற்றிய விபரம் பின்வருமாறு:

| நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கம் | நிறுவனத்தின் பெயர் | பதவியும் உத்தியோகத்தர்கள் எண்ணிக்கையும் | பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | முகாமைத்துவ உதவியாளர் - 02 | சொத்துக்கள்/உபகரணங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பேணிச் செல்லல், பராமரித்தல் பற்றிய பயிற்சி வேலையரங்கு | 2018.02.26 |
| 02 | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | முகாமைத்துவ உதவியாளர் - 10 | மூன்று நாள் சேவை ஆரம்ப பயிற்சி வேலையரங்கு | 2018.03.19-2018.03.21 |
| 03 | UNODC-வியனா | பணிப்பாளர் நாயகம் - 01 | குற்றத் தடுப்பும் குற்றவியல் நீதியும் பற்றிய ஆணைக்குழுவின் (CCPCJ) 27-வது கருத்தரங்கு (27th Session of the Commission on Crime Prevention and Criminal Justice (CCPCJ) | 2018.05.14-2018.05.19 |
| 04 | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | உதவிப் பணிப்பாளர் (நிதி) - 01 மற்றும் முகாமைத்துவ உதவியாளர் - 01 | கொள்வனவு நடைமுறை பற்றிய மூன்று நாள் வேலையரங்கு | 2018.05.31-2018.06.01 |
| 05 | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | சாரதி - 04 | சாரதிகளின் பணிகளும் பொறுப்புக்களும் | 2018.07.19-2018.07.20 |
| 06 | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | முகாமைத்துவ உதவியாளர் - 02 | கொள்வனவு நடைமுறை பற்றிய வேலையரங்கு | 2018.07.30-2018.07.31 |
| 07 | தேசிய தொழில் கல்வி நிறுவகம் | பணிப்பாளர் (நிதி) - 01 | கொள்வனவு நடைமுறை பற்றிய வேலையரங்கு | 2018.08.03-2018.08.07 |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | தகவல் தொழில் நுட்ப வளங்கள் அபிவிருத்தி அதிகார சபை | உதவிப் பணிப்பாளர் (03), முகாமைத்துவ சபையின் செயலாளர் (01), முகாமைத்துவ உதவியாளர் (09), அலுவலக உதவியாள் (02)- 15 | கணனி உள்ளீடுகள் பற்றிய பாடநெறி | 2018.11.10-2019.02.22 |
| 10 | மிலோடா நிதிக் கற்கைகள் கலாசாலை (Miloda Academy of Financial Studies) | முகாமைத்துவ உதவியாளர் -02 | அரச நிதிப் பிரமாணக் குறிப்புகள் (Public Finance Regulations) | 26.11.2018-28.11.2018 |
| 11 | திறன்கள் அபிவிருத்தி நிதியம்/ தாய்லாந்து புரபா பல்கலைக்கழகம் (Burapha University Thailand) | பணிப்பாளர் (கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்), பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்) -02 | தொழில்முயற்சிக் கருத்திட்டமும் நிறுவன முகாமைத்துவமும் பற்றிய சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (International Training Program on Enterprise Project and Organization Management) | 04.11.2018-10.11.2018 |
| 12 | திறன்கள் அபிவிருத்தி நிதியம்/பங்களூர் ரேவா பல்கலைக்கழகம் (Reva University of Bangalore) | பணிப்பாளர் - நிதி, முகாமைத்துவ சபையின் செயலாளர் -02 | மன அமைதியுடன் கூடிய தொழில்முயற்சி கற்கை முறை ஊடான நிறுவன செயலாற்றுகை | 19.11.2018-26.11.2018 |

குற்றத் தடுப்பும் குற்றவியல் நீதியும் பற்றிய ஆணைக்குழுவின் (CCPCJ) 27-வது கருத்தரங்கு UNODC-வியனா - 2018.05.14-2018.05.19






தொழில்முயற்சிக் கருத்திட்டமும் நிறுவன முகாமைத்துவமும் பற்றிய சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - திறன்கள் அபிவிருத்தி நிதியம்/ தாய்லாந்து புரபா பல்கலைக்கழகம் (Burapha University Thailand) - 04.11.2018-10.11.2018





மன அமைதியுடன் கூடிய தொழில்முயற்சி கற்கை முறை ஊடான நிறுவன செயலாற்றுகை - திறன்கள் அபிவிருத்தி நிதியம்/பங்களூர் ரேவா பல்கலைக்கழகம் (Reva University of Bangalore) - 19.11.2018-26.11.2018







2018 ஆம் ஆண்டில், முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு தடவைகள் என்ற அடிப்படையில் 24 அத்தகைய கூட்டங்களும், ஒரு விஷேட முகாமைத்துவ சபைக் கூட்டமும், 06 நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களும் மற்றும் 02 தடவைகளில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

இந்த அதிகார சபைக்கு 2018.12.31 ஆம் திகதியளவில் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள ஊழியர்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சேவை வகுதி | மு.சே.தி. அனுமதித்த ஆளணி | தற்பொழுதுள்ள பதவியணி |
|---|---|---|
| ***சிரேஷ்ட நிலை***<br>பணிப்பாளர் நாயகம்<br>பணிப்பாளர்<br>உதவிப் பணிப்பாளர்<br>முகாமைத்துவ சபையின் செயலாளர் | 10 | 9 |
| ***மூன்றாம் நிலை***<br>சட்ட உத்தியோகத்தர்<br>உள்ளகக் கணக்காய்வாளர்<br>விசாரணை உத்தியோகத்தர்<br>அரவணைப்பு உத்தியோகத்தர்<br>தொடர்பாடல் உத்தியோகத்தர்<br>தகவல் உத்தியோகத்தர்<br>மொழிபெயர்ப்பாளர் | 22 | 0 |
| ***இரண்டாம் நிலை***<br>முகாமைத்துவ உதவியாளர் (தொழில் நுட்பம் சாராத) | 10 | 10 |
| ***ஆரம்ப நிலை***<br>சாரதி<br>அலுவலக உதவியாள் | 12 | 12 |
| **மொத்தம்** | **54** | **31** |





(1) Senior level - சிரேஷ்ட நிலை
(2) Tertioary level - மூன்றாம் நிலை
(3) Secondary level - இரண்டாம் நிலை
(4) Primary level - ஆரம்ப நிலை
(5) MSD approved - மு.சே.தி. அனுமதித்த ஆளணி
(6) Exsisting cadre - தற்போதுள்ள பதவியணி

# சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவு

2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவுக்கு பொது மக்களிடமிருந்தும் மற்றும் அரச நிறுவனங்களிடமிருந்தும் கிடைத்த வேண்டுகோள்களினதும் மற்றும் முறைப்பாடுகளினதும் எண்ணிக்கை 86 ஆகும். ஒரு கடிதத்தில் பல வேண்டுகோள்கள் உள்ளடக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணக் கூடியதாக இருந்தன. அத்தகைய உரிய ஆவணங்கள் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வேண்டுகோள்களுக்கு இணங்க கீழ்காணும் விதத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| வேண்டுகோள்களின் தன்மை | வேண்டுகோள்களின் எண்ணிக்கை |
|---|---|
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள் | 20 |
| குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் | 06 |
| பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள் | 11 |
| உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள் | 11 |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும் உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 01 |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும், குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் | 01 |
| குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 02 |
| குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 08 |
| பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் மற்றும் உதவியை நாடு விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 02 |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும், குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 02 |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும், பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் மற்றும் உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 01 |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும், குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 01 |

| | |
|---|---|
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும், குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் மற்றும் பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 01 |
| ஏனைய வேண்டுகோள்கள் | 19 |
| **மொத்தம்** | 86 |




*(1) உரிமைகளும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்*
*(2) பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள்*
*(3) உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள்*
*(4) உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்*
*(5) உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்*
*(6) குறித்த சட்டத்தின் 8, 9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள்*
*(7) பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள்*
*(8) உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்*
*(9) உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்*
*(10) உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்*
*(11) உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்*
*(12) ஏனைய வேண்டுகோள்கள்*

2016 ஆம் ஆண்டிலும் மற்றும் 2017 ஆம் ஆண்டிலும் கிடைத்த முறைப்பாடுகளில் 29 முறைப்பாடுகள் 2018.01.01 ஆம் திகதி வரையிலும் நிறைவு பெறாதிருந்தன. 115 முறைப்பாடுகள் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன. நீதிமன்றத்திற்காக கிடைத்த ஒட்டுமொத்த முறைப்பாடுகளில் 63 முறைப்பாடுகள் தொடர்பான நீதிமன்ற விசாரணை நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டு இறுதியளவில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- **2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் பற்றிய சுருக்க விபரம்**

| வேண்டுகோள்களின் தன்மை | தொடர் இலக்கம் | முடிவுகள் |
|---|---|---|
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள் | (48) – VWPA/COM/KAL/02 | உதவி பொலிஸ் அத்தியட்சகரின் அறிக்கைக்கு இணங்க சம்பவத்திற்கு பொறுப்புக் கூறக் கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், முறைப்பாட்டாளரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. |
| | (44) - VWPA/COM/KAL/03 | உரிய பொலிஸ் நிலையத்தின் மூலம் எதிராளிக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் முறைப்பாட்டாளரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. |
| | (66) – VWPA/L&LE/RE/3/18 | உரிய இரண்டு முறைப்பாட்டு தரப்புகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக கொழும்பு வட பிராந்தியத்திற்கு பொறுப்புடைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவித்திருந்ததால் முறைப்பாடு தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்ய முகாமைத்துவ சபை தீர்மானித்துள்ளது. |
| | (67) - VWPA/L&LE/RE/4/18 | முறைப்பாட்டாளர், பொலிஸ் நடத்திய விசாரணைகள் தொடர்பில் திருப்தி அடைந்துள்ளார் என அவரின் சட்டத்தரனி கடிதம் மூலம் அறிவித்திருந்ததால், முறைப்பாடு தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| | (68) - VWPA/L&LE/RE/5/18 | பொலிஸ் பிரிவின் அறிக்கைக்கு இணங்க முறைப்பாட்டாளர் குற்றத்தால் பலியாகிய நபர் ஒருவர் அல்லது சாட்சியாளர் ஒருவர் அல்ல என்பதால் 2018.02.06 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபைக் கூட்டத்தில், முறைப்பாடு தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| | (75) -VWPA/L&LE/RE/8/18 | குற்றவாளிக்கு வழங்கிய தண்டனையை கேட்டறிய அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என சுட்டிக் காட்டி முறைப்பாட்டாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் நிமித்தம் குற்றவியல் வழக்கு தொடர்பான |

| | | |
|---|---|---|
| | | ஒழுங்குவிதிகள் பற்றிய சட்டத்தை திருத்த வேண்டியுள்ளது. குற்றவியல் வழக்கு தொடர்பான ஒழுங்குவிதிகள் பற்றிய சட்டத்தை திருத்துவதற்கான ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாலும் மற்றும் அது வரை இத்தகைய நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கு சட்டமுறையான தடைகள் இருப்பதாலும், முகாமைத்துவ சபையின் தீர்மானத்திற்கு இணங்க, முறைப்பாட்டாளருக்கு அது பற்றி அறிவித்து, முறைப்பாடு தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| | (92) - VWPA/L&LE/RE/12/18 | இந்த முறைப்பாடு குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராதது என முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| | (94) - VWPA/L&LE /RE/13/18 | பொலிஸ் அறிக்கைக்கு இணங்க முறைப்பாட்டாளரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆகையால் முறைப்பாடு தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| | (110) - VWPA/L&LE/RE/18/18 | முறைப்பாட்டாளரின் வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| | (135) - VWPA/L&LE/RE/23/18 | பொலிஸ் அறிக்கைக்கு இணங்க முறைப்பாட்டாளரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆகையால் முறைப்பாடு தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| குறித்த சட்டத்தின் 8, 9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் | (26) - VWPA/COM/COL/09 | உரிய பொலிஸ் நிலையத்தினால் முறைப்பாட்டாளரின் முறைப்பாடு பற்றி உரிய முறையில் விசாரணை செய்யப்பட்டுள்ளதாலும் மற்றும் அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கைக்கு இணங்க அது அச்சுறுத்தல் அல்ல என்பதாலும் 2018.02.09 ஆம் திகதி நடைபெற்ற தொழில் நுட்பக் குழுக் கூட்டத்தின் போது முறைப்பாடு பற்றிய உரிய நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| | (64) - VWPA/L&LE/0/2/18 | பொலிஸ் பிரிவின் அறிக்கைக்கு இணங்க முறைப்பாட்டாளருக்கு ஒரு அச்சுறுத்தல் இல்லை என்பதால் 2018.02.06 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது முறைப்பாடு பற்றிய உரிய நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| | (86) - VWPA/L&LE/0/10/18 | இந்த முறைப்பாடு குறித்த சட்டத்தின் 8, 9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற ஒரு குற்றம் தொடர்பானது அல்ல என்பதால் 2018.10.13 ஆம் திகதி நடைபெற்ற தொழில் நுட்பக் குழுக் கூட்டத்தின் போது முறைப்பாடு பற்றிய உரிய நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| | (93) - VWPA/L&LE/0/11/18 | இந்த முறைப்பாடு பொலிஸ் பிரிவின் அறிக்கைக்கு இணங்க குறித்த சட்டத்தின் 8, 9 ஆம் பந்திகளின் கீழ் வருகின்ற ஒரு குற்றம் தொடர்பானது அல்ல என்பதால் 2018.09.11 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது, முறைப்பாடு பற்றிய நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | (95) - VWPA/L&LE/0/12/18 | பொலிஸ் பிரிவின் அறிக்கைக்கு இணங்க குறித்த சட்டத்தின் 8, 9 ஆம் பிரிவுகளின் கீழ் நடவடிக்கையை எடுப்பதற்கு போதிய சான்றுகள் இல்லாததால் 2018.06.14 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது, முறைப்பாடு பற்றிய நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள் | (03) – VWPA/COM/HAM/02 | 2018.01.24 ஆம் திகதி முறைப்பாட்டாளர் வழங்கிய வாக்குமூலத்திற்கு இணங்க அந்த சந்தர்ப்பத்தில் அந்த முறைப்பாட்டாளருக்கு அச்சுறுத்தல் இல்லாததால் முறைப்பாடு பற்றிய நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| | (14)- VWPA/COM/INT/01 | பொலிஸ் பிரிவு சமர்ப்பித்த அறிக்கைக்கு இணங்க இந்த முறைப்பாடு ஒரு அச்சுறுத்தலுடன் தொடர்பானது அல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால், 2018.02.09 ஆம் திகதி நடைபெற்ற தொழில் நுட்பக் குழுக் கூட்டத்தின் போது, இந்த கோவை தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| | (35) – VWPA/COM/KAL/01 | பொலிஸ் பிரிவின் அறிக்கைக்கு இணங்க இந்த முறைப்பாடு ஒரு அச்சுறுத்தலுடன் அல்லது வற்புறுத்தலுடன் தொடர்பானது அல்ல என்பதால், கோவை தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| | (54)- VWPA/COM/COL/19 | முறைப்பாட்டை மூடும்படி முறைப்பாட்டாளர் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், 2018.06.14 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் குறித்த கோவை தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| | (91)- VWPA/L&LE/P/5/18 | சிறுவர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக இந்த முறைப்பாடு அதிகார சபைக்கு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் உத்தரவை மீறி நடவடிக்கை எடுக்க அதிகார சபைக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை என்பதால், அது பற்றி முறைப்பாட்டாளருக்கு அறிவித்து, குறித்த கோவை தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்ய முகாமைத்துவ சபை தீர்மானித்துள்ளது. |
| | (100)- VWPA/L&LE/P/7/18 | இந்த முறைப்பாடு அதிகார சபையின் விடயப் பரப்பில் வராததால் 2018.09.11 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபை கூட்டத்தின் போது, குறித்த முறைப்பாடு தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள் | (23)- VWPA/COM/COL/6 | இந்த முறைப்பாட்டுடன் தொடர்புடைய வழக்கு தொடர்பாக இரு தரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதால் குறித்த கோவை தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| குறித்த சட்டத்தின் 8, 9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | (60)- VWPA/L&LE/P/2/17<br>VWPA/L&LE/0/2/17 | பயங்கரவாத விசாரணை பிரிவின் அறிக்கைக்கு இணங்க முறைப்பாட்டாளர் உரிய வழக்குக்கான ஒரு சாட்சியாளர் அல்ல என்பதால் 2018.05.08 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபை கூட்டத்தின் போது, இந்த கோவை தொடர்பான நடவவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | (98)- VWPA/L&LE/0/13/18<br>VWPA/L&LE/P/6/18 | பொலிஸ் பிரிவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளின் பிரகாரம் இந்த கோவை தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு, 2018.10.13 ஆம் திகதி நடைபெற்ற தொழில் நுட்பக் குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் குறித்த சட்டத்தின் 8, 9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் | (62)- VWPA/L&LE/RE/01/18<br>VWPA/L&LE/0/1/18 | சரியான விதத்தில் முறைப்பாட்டாளரின் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால், இந்த கோவை தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும், குறித்த சட்டத்தின் 8, 9 பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | (56)- VWPA/L&LE/RE/1/17<br>VWPA/L&LE/0/1/17<br>VWPA/L&LE/P/1/17 | பொலிஸ் பிரிவின் அறிக்கைக்கு இணங்க, முறைப்பாட்டாளர் குற்றம் செய்த நபருடன் இணக்கப்பாட்டை எட்டியுள்ளதால், குறித்த கோவை தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| ஏனைய வேண்டுகோள்கள் | (13) – VWPA/COM/NUW/01 | கிராம உத்தியோக்கத்தரின் அறிக்கைக்கு இணங்க, முறைப்பாட்டாளருக்கு அச்சுறுத்தல் இல்லாததால் குறித்த கோவை தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| | (40)- VWPA/COM/KAL/02 | இந்த முறைப்பாட்டுடன் தொடர்பான சம்பவம் தொடர்பில் ஒரு சிவில் வழக்கை தாக்கல் செய்வதற்கு முறைப்பாட்டாளர் உடன்பட்டுள்ளார். ஆகையால், 2018.02.09 ஆம் திகதி நடைபெற்ற தொழில் நுட்பக் குழுக் கூட்டத்தின் போது, இந்த கோவை தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| | (59)- VWPA/L&LE/MISO//01/17 | குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் இந்த முறைப்பாட்டுடன் தொடர்புடைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த விசாரணைகளுக்கு இணங்க, குற்றம் செய்யப்பட்டிருப்பது இலங்கையில் அல்ல என்பதால், குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுக்க அதிகாரமில்லை என இந்த அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால், குறித்த கோவை தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| | (107)- VWPA/L&LE/MISC/11/18 | இந்த முறைப்பாடு அதிகார சபையின் விடயப் பரப்பில் வராதது என்பதால், இந்த கோவை தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு 2018.09.27 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| | (115)-VWPA/L&LE/ MISC/11/18 | சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபரின் அறிக்கைக்கு இணங்க, குறித்த கோவை தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| | (106)- VWPA/L&LE/MISC/9/18 | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிக்கைக்கு இணங்க, குறித்த கோவை |

| | | |
|---|---|---|
| | | தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| | (104)- VWPA/L&LE/MISC/8/18 | முறைப்பாடு அதிகார சபையின் விடயப் பரப்பில் வராததால், குறித்த கோவை தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |

# கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவு

குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாக்கும் பொறிமுறையை வலுப்படுத்தும் நிமித்தம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் (UNDP) 40 மில்லியன் ரூபா நிதியை மானியமாக வழங்கியுள்ளது. அந்த ஒப்பந்தம் 2017.11.24 ஆம் திகதி குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் தலைவரினாலும் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளரினாலும் கைச்சாத்திடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த அந்த நிதித் தொகை இந்த அதிகார சபையின் கணக்குக்கு 2018 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் வரவு வைக்கப்பட்டது. அந்த நிதி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கு பயன்படுத்தப் பட்டது. மேலும் அந்த மானிய நிதி இந்த அதிகார சபையின் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பல வகையான செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

அதற்கு இணங்க இந்த அதிகார சபையின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவின் கீழ் நியாயத்தை பெற்றுக் கொடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்கும் பல ஊழியர்களான,

- பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸ் தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள்
- சட்டத்தரனிகள்
- சட்ட மருத்துவ அதிகாரிகள்
- சிறைச்சாலை ஆணையாளர்கள் மற்றும் அத்தியட்சகர்கள்

ஆகியோருக்கான விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| **பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸ் தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள் ஆகியோரை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | |
|---|---|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்** | **நடத்தப்பட்ட திகதி** | **நடத்தப்பட்ட இடம்** | **பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை** |
| 01- மேல் மாகாணம் - முதலாம் கட்டம் | 2018.03.22-2018.03.23 | பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம் (B.M.I.C.H) | 54 |
| 02- மேல் மாகாணம் - இரண்டாம் கட்டம் | 2018.04.23-2018.04.24 | பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம் (B.M.I.C.H) | 56 |
| 03- மத்திய மாகாணம் | 2018.05.30-2018.05.31 | கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (N.I.C.D) - பொல்கொல்ல | 61 |
| 04- தென் மாகாணம் | 2018.06.12-2018.06.13 | பேர்ல் க்லிப் ஹோட்டல் - மாத்தறை | 61 |
| 05- சபரகமுவ மாகாணம் | 2018.06.28-2018.06.29 | ஹோட்டல் க்ரான்ட் கார்டியென் - இரத்தினபுரி | 28 |
| 06- கிழக்கு மாகாணம் | 2018.07.25-2018.07.26 | மொன்ட்டி ஹோட்டல் - அம்பாரை | 54 |
| 07- வட மத்திய மாகாணம் | 2018.08.24-2018.08.25 | ஹெரிடேஜ் ஹோட்டல் - அனுராதபுரம் | 36 |
| 08- ஊவா மாகாணம் | 26.10.2018-27.10.2018 | க்ரான்ட் ஹெரிடேஜ் ஹோட்டல் - பதுளை | 38 |
| 09- வட மேல் மாகாணம் | 13.10.2018-14.10.2018 | கரோலினா பீச் ஹோட்டல் - சிலாபம் | 47 |
| 10- வட மாகாணம் | 05.12.2018-06.12.2018 | டில்கோ ஹோட்டல் - யாழ்ப்பாணம் | 52 |
| **ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | |
| 11 - சட்ட மருத்துவ அதிகாரிகளை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | 2018.05.25 | பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம் (B.M.I.C.H) | 60 |
| 12- இலங்கை சட்டத்தரனிகள் சங்க உறுப்பினர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | 2018.07.07 | ஹோட்டல் க்ரான்ட் மொனார்க் | 100 |
| 13- சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரனிகளை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | 2018.07.21 | பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம் (B.M.I.C.H) | 60 |
| 14- சிறைச்சாலை ஆணையாளர்களையும் மற்றும் அத்தியட்சகர்களையும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | 10.12.2018 | B.M.I.CH | 40 |

**மேல் மாகாண பொலிஸ் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்களையும் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகளையும் விழிப்பூட்டுதல் - கட்டம் 1**

திகதி - 2018.03.22 - 2018.03.23

இடம் - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்

பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 54










**மேல் மாகாண பொலிஸ் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்களையும் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகளையும் விழிப்பூட்டுதல் - கட்டம் 2**

திகதி - 2018.04.23 - 2018.04.24

இடம் - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்

பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 56











**மத்திய மாகாண பொலிஸ் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்களையும் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகளையும் விழிப்பூட்டுதல்**

திகதி - 2018.05.30 - 2018.05.31

இடம் - கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம், பொல்கொல்ல

பங்கு பற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 61









**தென் மாகாண பொலிஸ் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்களையும் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகளையும் விழிப்பூட்டுதல்**

திகதி - 2018.06.12 -2018.06.13
இடம் - பேர்ல் க்லிப் ஹோட்டல், மாத்தறை
பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 61













**தென் மாகாண பொலிஸ் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்களையும் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகளையும் விழிப்பூட்டுதல்**

திகதி - 2018.06.28 - 2018.06.29
இடம் - ஹோட்டல் க்ரான்ட் கார்டியென், இரத்தினபுரி
பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 28






**கிழக்கு மாகாண பொலிஸ் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்களையும் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகளையும் விழிப்பூட்டுதல்**

திகதி - 2018.07.25 - 2018.07.26
இடம் - மொன்ட்டி ஹோட்டல், அம்பாறை
பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 54







**வட மத்திய மாகாண பொலிஸ் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்களையும் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகளையும் விழிப்பூட்டுதல்**

திகதி - 2018.08.24 - 2018.08.25
இடம் - ஹெரிடேஜ் ஹோட்டல், அனுராதபுரம்
பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 36












**ஊவா மாகாண பொலிஸ் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்களையும் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகளையும் விழிப்பூட்டுதல்**

திகதி - 2018.10.26 - 2018.10.27

இடம் - க்ரான்ட் ஹெறிடேஜ் ஹோட்டல், பதுளை

பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 38














**வடமேல் மாகாண பொலிஸ் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்களையும் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகளையும் விழிப்பூட்டுதல்**

திகதி - 2018.10.13 - 2018.10.14

இடம் - கரொலினா பீச் ஹோட்டல், சிலாபம்

பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 47




**வட மாகாண பொலிஸ் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்களையும் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகளையும் விழிப்பூட்டுதல்**


திகதி - 2018.12.05 - 2018.12.06
இடம் - டில்கோ ஹோட்டல், யாழ்ப்பாணம்
பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 52










**சட்ட மருத்துவ அதிகாரிகளை விழிப்பூட்டுதல்**

திகதி - 2018.05.25
இடம் - பண்டாரநாயக்க ஞாகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 60






## இலங்கை சட்டத்தரனிகள் சங்க உறுப்பினர்களை விழிப்பூட்டுதல்

திகதி - 2018.07.07

இடம் - ஹோட்டல் க்ரான்ட் மொனார்க், தலவத்துகொட

பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 100













## சட்ட உதவி ஆணைக்குழு சட்டத்தரனிகளை விழிப்பூட்டுதல்

திகதி - 2018.07.21

இடம் - பண்டாரநாயக்க ஞாகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்

பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 60












## சிறைச்சாலை ஆணையாளர்களையும் மற்றும் அத்தியட்சகர்களையும் விழிப்பூட்டுதல்

திகதி - 2018.12.10

இடம் - பண்டாரநாயக்க ஞாகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்

பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை - 40












- ட்ரான்ஸ்பேரென்ஸி இன்டர்நெஸனல் Transparency International) நிறுவனத்தின் மூலம் குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுதல் பற்றிய சட்டம் மற்றும் அவர்களின் உரிமைகள், உரித்துக்கள் முதலிய அம்சங்கள் உள்ளடங்கிய 3000 கைந்நூல்கள் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- இந்த அதிகார சபை 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சுடன் தொடர்ச்சியாக உறவுகளை பேணி கணிசமானளவு முன்னேற்றத்தை அடைந்ததிருந்தது.
- நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் மூலம் 2018.08.31 ஆம் திகதி உதவியை பெற்றுக் கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த (Donor Forum) நன்கொடை மாநாட்டில், இந்த அதிகார சபையின் தேவைகள் மற்றும் எதிர்வரும் வேலைத் திட்டங்கள் என்பன அடங்கிய ஒரு திட்டப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அவற்றை உள்ளடக்கிய ஒரு அறிக்கையும் அமைச்சுக்கு கையளிக்கப்பட்டது.
- இந்த அதிகார சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் ஆகியோரின் தலைமையில் சிறைச்சாலை ஆணையாளர்களுடன் இணைந்து எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பான ஒரு விஷேட நிகழ்ச்சித் திட்டம் திசம்பர் மாதம் 21 ஆம் திகதி இந்த அதிகார சபையில் நடத்தப்பட்டது. இந்த நிகழச்சித் திட்டத்தில் அதிகார சபையின் பணிப்பாளர் (கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்), பணிப்பாளர் (சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல்), பணிப்பாளர் (பொலிஸ் உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவு) மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினது தொழில் நிபுணர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நிதிப் பிரிவு

**2018.01.01 ஆம் திகதி முதல் 2018.12.31 ஆம் திகதி வரையான நிதி சார்ந்த முன்னேற்றம் பற்றிய விபரம்**

| விபரம் | 2018 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கிய நிதியேற்பாடு (ரூ.மில்.) | 2018.12.31 ஆம் திகதிற்கு ஏற்பட்டிருந்த செலவு (ரூ.மில்.) | 2018.12.31 ஆம் திகதிற்கான நிதி சார்ந்த முன்னேற்றம் |
|---|---|---|---|
| அரச மீண்டெழும் செலவுகள் | 32.60 | 31.17 | 95.61% |
| அரச மூலதன செலவுகள் | 15.00 | 9.13 | 60.86% |
| UNDP நிதியம் செய்த செலவுகள் | 21.66 | 18.70 | 86.33% |
| மொத்தம் | **69.26** | **59.00** | **85.18%** |

## 2018.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள்

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

**1. கூட்டிணைந்த தகவல்கள்**

**1.1. தாபிப்பும் மற்றும் சட்டப் பின்னணியும்**

2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவுதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான சட்டத்தின் மூலம் இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் பாராளுமன்றத்தினால் குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபை தாபிக்கப்பட்டு, நீதி அமைச்சின் கீழ் அதன் சேவைகள் வழங்கும் விடயப் பரப்பு வியாபிக்கப்பட்டது. இந்த அதிகார சபையின் தலைமை அலுவலகம் முதலாவது மாடி, இலக்கம் 428/11ஏ, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல எனும் இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

**1.2 பிரதான கரும பணிகளினதும் மற்றும் செயற்பாடுகளினதும் தன்மைகள்**

குறித்த இந்த சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு இந்த அதிகார சபையின் கடமைப் பணிகளும் மற்றும் பொறுப்புக்களும் 2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் உதவுதல் மற்றும் அவர்களை பாதுகாத்தல் தொடர்பான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது.

1.3 **ஊழியர்களின் எண்ணிக்கை**

2018 ஆம் ஆண்டு இறுதியளவில் இந்த அதிகார சபையின் ஆளணியில் 30 ஊழியர்கள் உள்ளடங்கியிருந்தனர்.

2 **கணக்குகள் தயாரித்தல் அடிப்படை**

2.1 **இணக்கப்பாட்டுக் கூற்று**

குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த அதிகார சபையின் கணக்கு அறிக்கையில் நிதி நிலைக் கூற்றுக்கள், நிதி சார்ந்த செயலாற்றுகை கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள், நிலை மாற்றம் மற்றும் நிதிக் கூற்றுக்கள் ஆகியவற்றுக்கான குறிப்புகள் என்பன அடங்கியுள்ளன. இந்த நிதி அறிக்கை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ள இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

**2.2. மதிப்பீட்டு அடிப்படை**

நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற பணவீக்க காரணிகளுக்கு எந்த விதமான சீராக்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

2.2 **ஈட்டப்பட்ட நிதி**

குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபையின் ஈட்டப்பட்ட நிதி இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டு இந்த நிதிக் கூற்றில் பதியப்பட்டுள்ளது.

3 **முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இந்தக் கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றில் முன்வைக்கப்பட்டுள்ளன. சகல காலப் பகுதிகளுக்கும் நிஜமாக ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்டன.

**3.1. சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

சொத்துக்களை கொள்வனவு செய்தல் அல்லது நிர்மாணித்தல் தொடர்பான செலவு மற்றும் எதிர்பார்த்த பாவனையின் நிமித்தம் அந்தந்த சொத்துக்களை இயங்கச் செய்யும் நிலைக்கு கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள செலவு ஆகியன சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கான ஆகுசெலவாகும். முதலில் சொத்துக்கள் ஆகுசெலவுக்கு இனங்காணப்பட்டதன் பின்னர் மீள்விலை மதிப்பீடு செய்யப்பட்டு தேய்மானம் கழிக்கப்பட்டதன் பின்னர் வரும் மீள்விலை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமானத்தின் அடிப்படையில் அத்தகைய சொத்துக்கள் பராமரிக்கப்படுகின்றன. ஏனைய சகல சொத்துக்களும், பொறித் தொகுதிகளும் மற்றும் உபகரணங்களும் திரண்ட தேய்மானம் கழிக்கப்பட்ட பின்னர் ஆகுசெலவில் காட்டப்படுகின்றன. சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு அத்தகைய பொருளின் பல பயனுள்ள பாவனை காலம் அடங்கலாக பாகங்கள் காணப்படுகின்ற போது அத்தகைய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன தனித்தனி சொத்துக்களாக இனங்காணப்பட்டு பதியப்படுகின்றன.

ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவிலும் சொத்துக்களின் தேய்மான பெறுமானங்கள், பயனுள்ள பாவனை காலம் மற்றும் தேய்மானம் கணிக்கும் முறை என்பன மீளாய்வு செய்யப்பட்டு ஏற்புடையதாயின் சீராக்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மானியங்களாக கிடைத்த சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

எந்த ஒரு மானியத்தின் கீழும் பெற்றுக் கொள்ளப்படும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன செலவுக்கான மூலதனமாக்கப்பட்டு பதியப்படுகின்றன.

நிரந்தர உரித்துடைய காணி தவிர ஏனைய சகல சொத்துக்கள், பொறித் தொதிகள் மற்றும் உபகரணங்கள் முதலிய யாவும் திரண்ட தேய்மானம் கழிக்கப்பட்ட பின்னர் ஆகுசெலவில் எடுத்துரைக்கப்படுகின்றன. நிரந்த உரித்துடைய காணி ஆகுசெலவில் காட்டப்படுகின்றது.

நிரந்தர உரித்துடைய காணி தவிர ஏனைய சகல சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மீதான தேய்மானம், மதிப்பிடப்பட்ட பயனுள்ள காலப் பகுதி முழுதிற்கும் ஆகுசெலவுகளை பதிவழிக்கும் பொருட்டு கணிக்கப்படுகின்றது.

குறித்த ஆண்டிற்கு தேய்மானத்தின் நிமித்தம் ஒதுக்கிய விகிதாசார அடிப்படை பின்வருமாறு:

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் முதலிய அனைத்தும் உரிய விதிமுறைகளின் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப் படுகின்றன. மேலும் சகல சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் என்பன **SLPSAS 7** - எனும் நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் எனும் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆகுசெலவு முறையின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | வாகனங்கள் | 20% |
| 2. | பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 25% |
| 3. | கணனிகள் மற்றும் துணைப் பாகங்கள் | 25% |
| 4. | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 10% |
| 5. | கட்டிடங்கள் | 4% |
| 6. | மென் பாகங்கள் | 25% |
| 7. | ஏனையவை | 10% |

சொத்துக்கள் அகற்றலின் அல்லது அவற்றின் பாவனை அல்லது அகற்றல் முதலிய விடயங்களின் ஊடாக எந்த ஒரு பொருளாதார நன்மைகளும் எதிர்பார்க்கப்படாத சந்தர்ப்பத்தில் சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றின் ஏதாவது துணைப் பாகங்கள் அகற்றப்படுகின்றன. சொத்துக்கள் அகற்றப்படுகின்ற போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் (அகற்றல்களிலிருந்து கிடைக்கும் தேறிய நிதி மற்றும் சொத்தின் பெறுமானம் ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசம் என கணக்கீடு செய்யப்பட்ட) உரிய சொத்துக்கள் அகற்றப்படுகின்ற ஆண்டின் வருமான கூற்றினுள் பதியப்படுகின்றது.

ஆரம்பத்தில் மதிப்பீடு செய்த செயலாற்றுகை நியமத்தின் ஊடாக எதிர்பார்த்த எதிர்கால பொருளாதார நன்மைகளை பேணிச் செல்லும் நோக்கில் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை பழுதுபார்த்தல் அல்லது பராமரித்தல் ஆகியவற்றின் நிமித்தம் செலவாகும் செலவுகள் அவை ஏற்படும் நேரத்தில் செலவாக இனங்காணப்படுகின்றன.

### 3.2 **பொருட்கள் இருப்பு**

நிதி ஆண்டினுள் பயன்படுத்திய பொருள் இருப்புக்களின் பெறுமானம் வருமான செலவு கூற்றில் ஆகுசெலவுக்கு பெறுமானம் கணிக்கப்பட்டுள்ளது.

ஆகுசெலவு, விற்பனை விலை அல்லது தேறிய ஈட்டிய பெறுமானம் ஆகிய மூன்றிலும் மிகவும் குறைந்த பெறுமான அடிப்படையில் எஞ்சிய பொருட்கள் தொகை பெறுமானம் கணிக்கப்படுகின்றது.

### **3.3. நிதியும் நிதிக்கு சமனானவையும்**

நிதியும் நிதிக்கு சமனானவையும் கையிலுள்ள காசையும் வங்கியிலுள்ள காசையும் உள்ளடக்கியிருக்கும்.

### **3.4. காசுப் பாய்ச்சல் கூற்று**

நேரடி முறையை பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

### 3.5. பொறுப்புக்களும் ஒதுக்கீடுகளும்

கடந்த கால சம்பவங்களின் விளைவாக நிகழ் காலத்தில் ஒரு பொறுப்பு காணப்படும் போது ஐந்தொகை கணக்கில் பொறுப்புக்கள் இனங்காணப்படுகின்றன. அவற்றை தீர்ப்பனவு செய்யும் போது பொருளாதார நன்மைகள் உள்ளடங்கலாக வளங்கள் ஒழுகல் நிகழ்கிறதா என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. கடன் உரித்தாளிகளினது வேண்டுகோளின் அடிப்படையில் அல்லது ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருட காத்தினுள் தீர்ப்பனவு செய்யக் கூடிய பொறுக்கள் நடைமுறை சொத்துக்களாக ஐந்தொகை கணக்கில் பதியப்படுகின்றன.

கடந்த கால சம்பவத்தின் விளைவாக, குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபைக்கு நம்பத் தகுந்த மதிப்பீடு செய்யக் கூடிய நிகழ்கால சட்டமுறையான அல்லது பயனுள்ள ஒரு பொறுப்பு காணப்படும் பட்சத்தில் அந்த உரிய பொறுப்பை தீர்ப்பனவு செய்யும் நிமித்தம் பொருளாதார நன்மைகள் பாய்ச்சல் அவசியம் எனில் ஒதுக்கல்களை இனங்காண முடியும்.

### 3.6. வரிவிதித்தல்

வரி சார்ந்த செலவுகள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ளன. 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தினதும் மற்றும் அதன் திருத்தங்களினதும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க வருமான வரி கணிப்பிடப்பட்டுள்ளது.

### 3.7. ஊழியர் நன்மைகள்

#### I. திடமான ஊழியர் பணிக்கொடை நன்மைகள் பங்களிப்புத் திட்டம்

திடமான ஊழியர் பணிக்கொடை நன்மைகள் பங்களிப்புத் திட்டம் தொடர்பான பொறுப்புக்கள் செய்த செலவாக வருமான கூற்றில் இனங்காணப்படுகின்றன. குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபையின் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் முறையே 12% மற்றும் 3% என்ற அடிப்படையில் பங்களிப்பு செய்யப்படுகின்றது.

#### II. திடமான ஊழியர் பணிக்கொடை நன்மைகள் திட்டத்தின் வரைவிலக்கணம்

திடமான ஊழியர் பணிக்கொடை நன்மைகள் திட்டம் என்பது ஊழியர்களுக்கான நன்மைகள் அடங்கிய ஒரு பங்களிப்புத் திட்டமாகும். குறித்த சட்டத்தின் பிரகாரம் ஊழியர்களுக்கான பணிக் கொடையை செலுத்த குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபை கடமைப் பட்டுள்ளது. இந்த பொறுப்பை நிறைவேற்றும் நிமித்தம் ஊழியர் சேவையாற்றிய முதலாவது வருடத்தில் ஆரம்பமாகி சேவை காலம் முழுமை பெறும் ஒவ்வொரு வருடத்திற்கும் சகல ஊழியர்களினதும் கடந்த நிதி ஆண்டில் இறுதியாக அவர்கள் பெற்றுள்ள அரை மாத சம்பளத்திற்கு சமனான ஒரு விகித அடிப்படையில் குறித்த இந்த நன்மை கணிப்பிடப்பட்டு ஐந்தொகை கணக்கில் முன்கொணப்படுகின்றது.

1993 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் செலுத்தக் கூடிய பணிக்கொடைக்குரிய சகல ஊழியர்களுக்கும் ஓய்வூதிய பணிக்கொடைக்காக நிதி ஒதுக்கப்படுகின்றது. இந்த விடயம் ஐந்தொகை கணக்கில் நடைமுறையால்லாத சொத்துக்கள் வகுதியின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது.

பொதுத் திறைசேரிக்கு இணங்க அது தேவையான போது நிதியை வழங்குவதால் இதன் நிமித்தம் ஒரு நிதியம் அவசியமற்றதாகும்.

**3.8. இந்த அதிகார சபையின் நிதியங்கள்**

குறித்த சட்டத்தின் 18 மற்றும் 29 ஆம் பிரிவுகளின் பிரகாரம் இரண்டு (2) நிதியங்கள் இந்த அதிகார சபைக்கு இருக்கின்றன.

1. அதிகார சபையின் நிதியம்

   இந்த நிதியத்திற்கு கீழ்காணும் விதத்தில் நிதி வரைவுவைக்கப்படுதல் வேண்டும்.

- இந்த அதிகார சபையின் பயன்பாடு நிமித்தம் பாராளுமன்றம் அவ்வப்பொழுது அங்கீகரித்து ஒதுக்கும் நிதி மற்றும்
- வெகுமானங்கள், நன்கொடைகள், மாற்றல்கள், மானியங்களாக இலங்கையிலும் இலங்கைக்கு வெளியாலும் காணப்படுகின்ற நிதி மூலங்களில் இருந்து இந்த அதிகார சபைக்கு கிடைக்கும் சகல நிதிகளும்.

   குறித்த சட்டத்தின் கீழ் அதிகார சபை கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் போது ஏற்படும் செலவுகள் இந்த அதிகார சபையின் நிதியில் இருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. பாதுகாப்பு நிதியம்

   பாதுகாப்பு நிதியத்திற்கு கீழ்காணும் விதத்தில் நிதிகள் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

- குறித்த நிதியத்திற்கு பாராளுமன்றம் அவ்வப்பொழுது அங்கீகரித்து ஒதுக்கும் சகல நிதிகளும்,
- வெகுமானங்கள், நன்கொடைகள், மாற்றல்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களில் இருந்து அதிகார சபைக்கு கிடைக்கும் பாதுகாப்பு நிதியத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய சகல நிதிகளும்
- குறித்த சட்டத்தின் 28 ஆம் பிரிவின் (1) (அ) (ii) உப பிரிவின் கீழ் நீதிமன்றங்கள் அனுப்பி வைக்கும் சகல நிதிகளும்

   குறித்த சட்டத்தின் 29 ஆம் பிரிவின் (4) (அ) மற்றும் (ஆ) உப பிரிவுகளின் கீழ் செலுத்தும் நிமித்தம் சபையினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.9. வருமான இங்காணல்**

**3.9.1 வருமான இனங்காணல்**

குறித்த சட்டத்தின் (1) (அ) (ii) உப பந்தியின் கீழ் நீதிமன்றத்தால் அனுப்பி வைக்கப் படும் சகல நிதிகளும் கிடைப்பனவு அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன. வட்டி, அதே போல் ஏனைய சகல வருமானங்கள் அனைத்தும் திரண்ட அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

**3.9.2 செலவு**

சபையை நிருவகித்து செல்கின்ற போது ஏற்பட்டுள்ள சகல செலவுகளும் திரண்ட அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. சபையின் வருமானம் ஈட்டுகின்ற

ஆற்றலை பேணிச் செல்லல் அல்லது வருமானம் ஈட்டலை அதிகரித்தல் நிமித்தம் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல், வியாபிக்கச் செய்தல் அல்லது அபிவிருத்தி செய்தல் முதலிய விடயங்கள் தொடர்பாக செய்யப்பட்ட செலவுகள் அனைத்தும் மூலதன செலவுகளாக கருதப்பட்டுள்ளன.

### 3.10. ஒப்பீட்டுத் தகவல்கள்

தேவையான போது நடைமுறை ஆண்டின் கணக்கு சமர்ப்பித்தலுக்கு இணங்க ஒத்தீட்டுப் புள்ளிவிபரங்கள் மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 3.11. ஐந்தொகை கணக்கு திகதிற்கு பின்னர் எழும் சம்பவங்கள்

ஐந்தொகை கணக்கு திகதிற்கு முன்னர் எழும் சகல சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டன. பொருத்தமான சந்தர்ப்பங்களில் நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்ற வகையில் சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

### 3.12. பொறுப்புக்களும் எதிர்பாராத சம்வபங்களும்

கடந்த காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் சம்பந்தமாக நிகழ்ந்த எதிர்பாராத சம்பவங்கள் நிச்சயமற்ற சம்பவங்களாகும். சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் எதிர்பாராத விதத்தில் நிகழ்ந்துள்ளமை அல்லது நிகழாமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த எதிர்பாராத சம்பவங்கள் உறுதிசெய்யப்படுகின்றன.

### 3.13. மானியங்களை கணக்கீடு செய்தல்

**i.** அரச மானியங்கள்

சமர்ப்பித்தல் முறை அடங்கலாக அரச மானியங்களுக்கு பிரயோகிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருமாறு காணப்படும்.

(அ) சொத்துக்களை கொள்வனவு செய்யும் நிமித்தம் அரச மானியங்கள் சொத்துக்களின் பாவனை காலம் முழுதிலும் வருமானமாக இனங்காணப் படுகின்றன.

(ஆ) கிடைக்கும் ஏனைய மானியங்களும் அதன் பின்னர் ஏற்பட்டுள்ள செலவுகளும் இலாப நட்டக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3.14. முதலீடு

பொருத்தமான பாதுகாப்பான முறையில் சபை அதன் நிதியத்திற்கு வரவு வைக்கப் பட்டுள்ள நிதிகளை முதலீடு செய்யும் போது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகள் என கணக்குகளை திறத்தல் மற்றும் அத்தகைய கணக்குகளை பேணிச் செல்லல் தொடர்பான விடயங்கள் குறித்த சட்டத்தின் 14 ஆம் பிரிவினது (ஆ) உப பிரிவின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளன.

குறித்த சட்டத்திற்கு இணங்க சபை அதன் நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள நிதிகளை பொருத்தமான பாதுகாப்பான ஒரு முறையில் மூலதன உபகரணங்களில் முதலீடு செய்கின்றது. அந்த முதலீடுகள் ஆகுசெலவு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

## குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

## 2018 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை பற்றிய கூற்று

| | குறிப்பு இலக்கம் | 2018<br>ரூபா | 2017<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| கையிலுள்ள காசும் வங்கியிலுள்ள காசும் | **08** | 555,800 | - |
| பொறுப்புக்கள் | **09** | 15,000 | - |
| ஏனைய சொத்துக்கள் | **10** | 1,159,720 | - |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | **1,730,520** | **-** |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் | **11** | 15,482,742 | 2,661,292 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | **15,482,742** | **2,661,293** |
| **மொத்த சொத்துக்கள்** | | **17,213,262** | **2,661,292** |
| கழிக்குக: | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | **12** | **246,514** | - |
| **மொத்த நடைமுறை பொறுப்புக்கள்** | | **246,514** | **-** |
| **தேறிய நடைமுறை சொத்துக்கள்** | | **1,484,005** | **-** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | **13** | **440,404** | **-** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **686,919** | **-** |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **16,526,343** | **2,661,292** |
| **கீழ்காணும் விதத்தில் நிதி விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன** | | | |
| திரட்டு நிதியம் | **14** | 487,801 | - |
| அதிகார சபையின் பாதுகாப்பு நிதியம் | **15** | 555,800 | - |
| அரச மானியங்கள் | **16** | 8,139,968 | 2,661,292 |
| UNDP மானியங்கள் | **17** | 7,342,774 | - |
| | | **16,526,343** | **2,661,292** |

1-5 வரையான பக்கங்களில் காணப்படும் நிதி சார்ந்த கொள்கைகளும், 10-15 வரையான பக்கங்களில் காணப்படும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களாகும். இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து முன்வைப்பது முகாமைத்துவ சபையின் பொறுப்பாகும். குறித்த இந்த நிதிக் கூற்றுக்கள் முகாமைத்துவ சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளன. முகாமைத்துவ சபையின் சார்பாக கீழ்காணும் அதிகாரிகள் கையொப்பமிட்டுள்ளனர்.

.................................
ஜி.டீ.ஆர். பெரேரா
பணிப்பாளர் (நிதி)

...............................................
உதயகுமார அமரசிங்க
பணிப்பாளர்
நாயகம்

...............................................
சுகத கே. கமலத்
தலைவர்

.......................................
விஜித சேனாரத்ன
முகாமைத்துவ சபை
உறுப்பினர்

...............................
மருத்துவர் நீல் பெர்னாந்து
முகாமைத்துவ சபை உறுப்பினர்

## குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

2018 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி சார்ந்த செயலாற்றுகை கூற்று

| | குறிப்பு இலக்கம் | 2018 ரூபா | 2017 (ஒற்றோபர் - திசம்பர்) ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | **1** | | |
| மானியங்கள் | **1.1** | 31,181,249 | 5,123,226 |
| ஏனைய வருமானங்கள் | **1.2** | 23,080,227 | 68,238 |
| **மொத்த வருமானம்** | | **54,261,476** | **5,191,464** |
| **இயக்கச் செயற்பாடு சார்ந்த செலவுகள்** | | | |
| தனியாள் வேதனாதிகள் | **2** | 22,659,856 | 4,185,310 |
| பிரயாண செலவுகள் | **3** | 310,004 | 42,168 |
| வழங்கல்களும் நுகர்வுப் பொருட்களும் | **4** | 2,900,051 | 409,759 |
| பராமரிப்பு | **5** | 3,295,380 | 5,590 |
| ஒப்பந்த சேவைகள் | **6** | 23,514,465 | 480,399 |
| தேய்மானம் | **7** | 1,093,920 | 68,238 |
| **மொத்த செலவுகள்** | | **53,773,675** | **5,191,464** |
| **குறித்த காலப் பகுதிற்கான மிகைகள்/ (பற்றாக்குறைகள்)** | | **487,801** | **-** |

# குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

2018 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று

| | | 2018<br>ரூபா | 2017<br>ரூபா |
|---|---|---|---|
| **இயக்கச் செயற்பாடுகளில் இருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| குறித்த ஆண்டிற்கான மிகை/(பற்றாக்குறை) | | 487,801 | - |
| கழிக்குக: | நிலையான சொத்துக்கள் விற்பனையால் கிடைத்த இலாபம் | - | - |
| | மூலதன மானியங்களின் செயற்பாடு | (1,093,920) | (68,238) |
| கூட்டுக: | குறித்த ஆண்டிற்கான தேய்மானம் | 1,093,920 | 68,238 |
| | பணிக்கொடைக்கான நிதியேற்பாடு | 440,404 | - |
| **தொழிற்படு மூலதனத்திற்கு முன்னருள்ள இயக்கச் செயற்பாட்டு மிகை/(பற்றாக்குறை)** | | **928,205** | **-** |
| | பொருட்களின் இருப்பு அதிகரித்தல் | (1,159,720) | - |
| | வர்த்தக மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் அதிகரித்தல் (குறைவு) | - | - |
| | முன்னைய கொடுப்பனவுகள் அதிகரித்தல் | (15,000) | - |
| | திரண்ட செலவினமும் செலுத்தக் கூடிய ஏனைய கொடுப்பனவுகளும் அதிகரித்தல் | 246,514 | - |
| | குறித்த ஆண்டினுள் செலுத்திய பணிக்கொடை | - | - |
| | | **(928,205)** | **-** |
| **இயக்கச் செயற்பாடுகளில் இருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | **-** | **-** |
| **முதலீடு சார்ந்த செயற்பாடுகளில் இருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| | நிலையான சொத்துக்கள் கொள்வனவு | (13,915,369) | - |
| | நிலையான சொத்துக்கள் விற்பனையால் கிடைத்த நிதி முதலீடு | - | - |
| | | - | - |
| **முதலீடு சார்ந்த செயற்பாடுகளில் இருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | **(13,915,369)** | **-** |
| **நிதி சார்ந்த செயற்பாடுகளில் இருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| | உள்ளக நிதியத்திற்கான தேறிய கிடைப்பனவுகள் | 555,800 | - |
| | மூலதன மானியம் | 13,915,369 | - |
| **நிதி சார்ந்த செயற்பாடுகளில் இருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | **14,471,169** | **-** |

| | | |
|---|---|---|
| **பயன்படுத்தப்பட்டுள்ள தேறிய நிதியின் அளவு** | **555,800** | **-** |
| **2018. 01.01 ஆம் திகதிற்கான காசும் மற்றும் காசுக்கு சமனானவைகளும்** | **-** | - |
| **2018. 12.31 ஆம் திகதிற்கான காசும் மற்றும் காசுக்கு சமனானவைகளும்** | **555,800** | - |

## குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை
## 2018 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி தொகுதியிலுள்ள வித்தியாசங்கள் பற்றிய கூற்று

| | நிதிகள் (ரூ.) | மானியங்கள் (ரூ.) | திரண்ட நிதிகளும் நிதி தொகுதிகளும் (ரூ.) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 2017 சனவரி 1 ஆம் திகதியிலுள்ள நிலுவை | - | 2,729,531 | - | 2,729,531 |
| குறித்த ஆண்டு காலப் பகுதிற்குரிய மாற்றல்கள் | - | (68,238) | - | (68,238) |
| 2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **-** | **2,661,292** | **-** | **2,661,292** |
| 2018 சனவரி 1 ஆம் திகதிற்கான நிலுவை | - | 2,661,292 | - | 2,661,292 |
| குறித்த ஆண்டு காலப் பகுதிற்குரிய அறவீடுகள் | - | 40,939,171 | 487,801 | 41,426,972 |
| குறித்த ஆண்டு காலப் பகுதிற்குரிய மாற்றல்கள் | 555,800 | (28,117,722) | - | (27,561,922) |
| 2018 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **555,800** | **15,482,742** | **487,801** | **16,526,342** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு - 01**<br><br>**வருமானம்** | **2018**<br><br>**(ரூ.)** | **2017 (ஒற்றோபர் - திசம்பர்)**<br>**(ரூ.)** |
|---|---|---|
| 1.1 - மானியங்கள் | | |
| அரச மானியங்கள் - மீண்டெழும் | | |
| குறித்த ஆண்டு காலப் பகுதிற்கான கிடைப்பனவுகள் | 32,600,000 | 5,462,000 |
| குறித்த ஆண்டு காலப் பகுதிற்கான மீள் கொடுப்பனவுகள் | (1,418,751) | (338,774) |
| | 31,181,249 | 5,123,226 |
| 1.2 - ஏனைய வருமானங்கள் | | |
| ஏனைய வருமானம் | | |
| குறித்த ஆண்டு காலப் பகுதிற்கான கிடைப்பனவுகள் | 115,680 | - |
| குறித்த ஆண்டு காலப் பகுதிற்கான மீள் கொடுப்பனவுகள் | (115,680) | - |
| | - | - |
| பிற்போடப்பட்டுள்ள வருமானங்கள் | | |
| பிற்போடப்பட்டுள்ள வருமானம் - அரச மானியங்கள் | 3,650,932 | |
| பிற்போடப்பட்டுள்ள வருமானம் - UNDP மானியங்கள் | 19,429,295 | 68,238 |
| | 23,080,227 | 68,238 |
| **மொத்தம்** | **54,261,477** | **5,191,464** |

****2018 ஆம் ஆண்டிற்கு மீண்டெழும் செலவுகள் தொடர்பாக இந்த அதிகார சபைக்கு ரூ. 60,000,000.00 தொகையான நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. எனினும், 2018 ஆம் ஆண்டிற்கு மீண்டெழும் செலவுகளாக ரூ. 32,600,000.00 தொகை மாத்திரம் தேவைப்பட்டது. எஞ்சிய ரூ. 27, 400, 000.00 நிதி நிரல் அமைச்சுக்கு மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.**
****நிரல் அமைச்சினால் மீண்டெழும் செலவுகளின் நிமித்தம் பெற்றுத் தரப்பட்டிருந்த ரூ. 32,600,000.00 முற்பண நிதி, 2018.12.31 ஆம் திகதி அளவில் தீர்ப்பனவு செய்யப்பட்டது.**

| **குறிப்பு - 02**<br>**செலவு** | **2018**<br>**(ரூ.)** | **2017 (ஒற்றோபர் - திசம்பர்)**<br>**(ரூ.)** |
|---|---:|---:|
| **தனியாள் வேதனாதிகள்** | | |
| சம்பளங்களும் வேதனங்களும் | 9,950,484 | 1,662,570 |
| ஊழியர் சேமலாப நிதி | 1,581,254 | 302,457 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 395,314 | 75,614 |
| மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 767,749 | 12,886 |
| பணிக்கொடைக் கொடுப்பனவுகள் | 440,404 | - |
| பதில் கடமைகளுக்கான கொடுப்பனவுகள் | 339,608 | 215,147 |
| பிரயாண கொடுப்பனவுகள் | 1,600,000 | 600,000 |
| எரிபொருள் கொடுப்பனவுகள் | 1,116,210 | 179,010 |
| வாழ்க்கைப்படி கொடுப்பனவுகள் | 2,424,500 | 403,520 |
| சீராக்கல் கொடுப்பனவுகள் | 1,000,807 | 318,620 |
| தொழில் சார் கொடுப்பனவுகள் | 251,526 | 38,710 |
| முகாமைத்துவ சபை கொடுப்பனவுகள் | 1,790,000 | 220,000 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 1,002,000 | 156,777 |
| **மொத்தம்** | **22,659,856** | **4,185,310** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு - 03**<br>**பிரயாண செலவுகள்** | **2018**<br>**(ரூ.)** | **2017 (ஒற்றோபர் - திசம்பர்)**<br>**(ரூ.)** |
|---|---:|---:|
| உள்நாட்டு பிரயாண செலவு | 91,478 | 4,100 |
| வெளிநாட்டு பிரயாண செலவு | 218,526 | 38,068 |
| **மொத்தம்** | **310,004** | **42,168** |

| குறிப்பு - 04<br>வழங்கல்களும் நுகர்வுப் பொருட்களும் | 2018<br>(ரூ.) | 2017<br>(ஒற்றோபர் - திசம்பர்)<br>(ரூ.) |
|---|---|---|
| அச்சீடுகளும் காகிதாதிகளும் | 737,743 | 67,962 |
| எரிபொருட்களும் உராய்வுநீக்கி எண்ணெய்களும் | 853,234 | 36,834 |
| சீருடைகள் | 36,000 | - |
| ஒய்வு சார்ந்த செயற்பாடுகள் | 318,903 | 30,771 |
| வணிக விளம்பரங்கள் | 646,070 | 251,333 |
| செய்திப் பத்திரிகைகள் | 15,600 | - |
| ஏனைய வழங்கல்கள் | 292,501 | 22,860 |
| **மொத்தம்** | **2,900,051** | **409,759** |

| குறிப்பு - 05<br>பராமரிப்பு | 2018<br>(ரூ.) | 2017<br>(ஒற்றோபர் - திசம்பர்)<br>(ரூ.) |
|---|---|---|
| பராமரிப்பு செலவுகள் - வாகனம் | 1,501,580 | - |
| பராமரிப்பு செலவுகள் - பொறித் தொகுதிகள், உபகரணங்கள் | 211,280 | 4,590 |
| பராமரிப்பு செலவுகள் - கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 1,582,520 | 1,000 |
| **மொத்தம்** | **3,295,380** | **5,590** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| குறிப்பு - 06<br>ஒப்பந்த சேவைகள் | 2018 (ரூ.) | 2017<br>(ஒற்றோபர் - திசம்பர்) |
|---|---|---|
| போக்குவரத்து | 18,172 | 3,636 |
| தொலைத் தொடர்பு வசதிகள் கட்டணம் | 671,686 | 62,576 |
| தபால் கட்டணங்கள் | 28,600 | 755 |
| மின்சார, தண்ணீர் கட்டணங்கள் | 16,732 | 4,927 |
| துப்புரவேற்பாடு சார்ந்த கட்டணங்கள் | 766,153 | 406,105 |
| ஏனைய சேவைகள் - அரசாங்கத்தின் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் | 3,280,909 | - |
| ஏனைய சேவைகள் - UNDP விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் | 18,705,398 | - |
| ஏனைய சேவைகள் - ஏனையவை | 26,815 | 2,400 |
| **மொத்தம்** | **23,514,465** | **480,399** |

| குறிப்பு - 07<br>தேய்மானம் | 2018 (ரூ.) | 2017 (ஒற்றோபர் - திசம்பர்) |
|---|---|---|
| கட்டிடங்களினதும் நிர்மாணங்களினதும் புனர்நிர்மாணிப்புகள் - அரச மானியங்கள் | 32,431.91 | - |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் - அரச மானியங்கள் | 327,365.66 | 68,238 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் - UNDP மானியங்கள் | 161,865.01 | - |
| கணனிகளும் துணைப் பாகங்களும் - அரச மானியங்கள் | 6,060.27 | - |
| கணனிகளும் துணைப் பாகங்களும் - UNDP மானியங்கள் | 562,032.05 | - |
| மென் பாகங்கள் அபிவிருத்தி - அரச மானியங்கள் | 4,164.95 | - |
| **மொத்தம்** | **1,093,920** | **68,238** |

| குறிப்பு - 08<br>கையிலும் வங்கியிலுமுள்ள காசு | 2018 (ரூ.) | 2017 (ரூ.) |
|---|---|---|
| இலங்கை வங்கி கணக்கு இலக்கம் -C/A-81479591 | - | - |
| இலங்கை வங்கி - அதிகார சபையின் நிதிய கணக்கு இலக்கம் C/A-81624249 | 555,800 | - |
| நுண் நிதி | - | |
| **மொத்தம்** | **555,800** | **-** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு - 09**<br>வைப்புக்கள் | 2018 (ரூ. | 2017 (ரூ.) |
|---|---|---|
| மீளளிக்கக்  கூடிய வைப்புகள் - எரிபொருள் | 15,000 | - |
| **மொத்தம்** | **15,000** | **-** |

| குறிப்பு - 10<br>ஏனைய சொத்துக்கள் | 2018 (ரூ.) | 2017 (ரூ.) |
|---|---|---|
| பொருள் இருப்பு | 1,159,720 | - |
| **மொத்தம்** | **1,159,720** | **-** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

**குறிப்பு - 11**

## 2018 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலையான சொத்துக்கள்

| தகவல் | கட்டிடங்கள் (ரூ.) | வாகனங்கள் (ரூ.) | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் (ரூ.) | கணனிகள் (ரூ.) | பொறித் தொகுதிகள், இயங்திராதிகள் (ரூ.) | மென் பாகங்கள் (ரூ.) | ஏனையவை (ரூ.) | காணி (ரூ.) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2018 சனவரி 01 ஆம் திகதிற்கான ஆகுசெலவு** | **-** | **-** | **2,729,531** | **-** | **-** | **-** | **-** | **-** | |
| சேகரித்தல்கள் | 1,991,278 | - | 6,450,466 | 5,283,600 | - | 190,026 | - | - | **13,915,370** |
| அகற்றல்கள் | - | - | - | - | - | - | - | - | **-** |
| **2018 திசம்பர் 31 ஆம் திகதிற்கான ஆகுசெலவுகள்** | **1,991,278** | **-** | **9,179,997** | **5,283,600** | **-** | **190,026** | **-** | **-** | **16,644,901** |
| **2018 சனவரி 01 ஆம் திகதிற்கான திரண்ட தேய்மானம்** | **-** | **-** | **68,238** | **-** | **-** | **-** | **-** | **-** | **68,238** |
| தேய்மானம் | 32,432 | - | 489,231 | 568,092 | - | 4,165 | - | - | **1,093,920** |
| அகற்றல்கள் | - | - | - | - | - | - | - | - | **-** |
| **2018 திசம்பர் 31 ஆம் திகதிற்கான திரண்ட தேய்மானம்** | **32,432** | **-** | **557,469** | **568,092** | **-** | **4,165** | **-** | **-** | **1,162,158** |
| **2018 சனவரி 01 ஆம் திகதிற்கான பதிவழிக்கப்பட்டுள்ள பெறுமானம்** | **-** | **-** | **2,661,292** | **-** | **-** | **-** | **-** | **-** | **2,661,292** |
| **2018 திசம்பர் 31 ஆம் திகதிற்கான பதிவழிக்கப்பட்டுள்ள பெறுமானம்** | **1,958,846** | **-** | **8,622,528** | **4,715,508** | **-** | **185,861** | **-** | **-** | **15,482,742** |

**இந்த அதிகார சபை சார்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் ரூ. 3, 415, 071.00 பெறுமதியான தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும், ரூ. 4,651,600.00 பெறுமதியான கணனிகளும், கணனி துணைப் பாகங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.**

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு - 12**<br>**ஏனைய பற்றுக்கள்** | **2018**<br>**(ரூ.)** | **2017**<br>**(ரூ.)** |
|---|---|---|
| திரண்ட செலவுகள் - ஏனைய கொடுப்பனவுகள் | 100,000.00 | - |
| திரண்ட செலவுகள் - மேலதிக நேர கொடுப்பனவுகள் | 65,198 | - |
| திரண்ட செலவுகள் - உள்நாட்டு பிரயாண கொடுப்பனவு | 10,400 | - |
| திரண்ட செலவுகள் - எரிபொருள் கொடுப்பனவுகள் | 5,000 | - |
| திரண்ட செலவுகள் - தொலைத் தொடர்பு கட்டணங்கள் | 55,756 | - |
| திரண்ட செலவுகள் - விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 3,441 | - |
| திரண்ட செலவுகள் - சம்பளங்களும் வேதனங்களும் | 6,719 | - |
| **மொத்தம்** | **246,514** | **-** |

| **குறிப்பு - 13**<br>**நடைமுறையல்லாத பற்றுக்கள்/பொறுப்புக்கள்** | **2018**<br>**(ரூ.)** | **2017**<br>**(ரூ.)** |
|---|---|---|
| செலுத்தவுள்ள பணிக்கொடை நிதி (குறிப்பு 13 (1)) | 440,404 | - |
| **மொத்தம்** | **440,404** | **-** |

| **குறிப்பு - 13(1)**<br>**பணிக்கொடை** | **2018**<br>**(ரூ.)** | **2017**<br>**(ரூ.)** |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | - | - |
| குறித்த ஆண்டிற்கான அறவீடுகள் | 440,404 | - |
| குறித்த ஆண்டு காலப் பகுதியில் செலுத்திய பணிக்கொடை நிதிகள் | | - |
| **மொத்தம்** | 440,404 | - |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு - 14**<br>**திரட்டு நிதி** | **2018**<br>**(ரூ.)** | **2017**<br>**(ரூ.)** |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | - | - |
| குறித்த ஆண்டிற்கான மிகைகள்/பற்றாக்குறைகள் | 487,801 | - |
| **மொத்தம்** | **487,801** | **-** |

| குறிப்பு - 15<br>அதிகார சபையின் பாதுகாப்பு நிதி | 2018<br>(ரூ.) | 2017<br>(ரூ.) |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | - | - |
| குறித்த ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றல்கள் | 555,800 | - |
| **மொத்தம்** | **555,800** | **-** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| குறிப்பு - 16<br>அரச மூலதன மானியங்கள் | 2018<br>(ரூ.) | 2017<br>(ரூ.) |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | 2,661,292 | - |
| குறித்த ஆண்டு காலப் பகுதியில் கிடைத்த கிடைப்பனவுகள் | 11,212,000 | 2,729,531 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியில் செலுத்தப்பட்டுள்ள மீள் கொடுப்பனவுகள் | (2,082,393) | - |
| குறித்த ஆண்டு காலப் பகுதியில் பிற்போடப்பட்டுள்ள மானியங்கள் | (3,650,932) | (68,238) |
| **மொத்தம்** | **8,139,968** | **2,661,292** |

| குறிப்பு - 17<br>ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலதன மானியங்கள் | 2018<br>(ரூ.) | 2017<br>(ரூ.) |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | - | - |
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்த நிலையான சொத்துக்கள் மானியம் - குறித்த ஆண்டு காலப் பகுதியில் கிடைத்த கிடைப்பனவுகள் | 8,066,671 | - |
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்த மூலதன மானியங்கள் - குறித்த ஆண்டு காலப் பகுதியில் கிடைத்த கிடைப்பனவுகள் | 21,660,500 | |
| குறித்த ஆண்டு காலப் பகுதியில் செலுத்தப்பட்டுள்ள மீள் கொடுப்பனவுகள் | (2,955,102) | - |
| குறித்த ஆண்டு காலப் பகுதியில் பிற்போடப்பட்டுள்ள மானியங்கள் | (19,429,295) | - |
| **மொத்தம்** | **7,342,774** | **-** |

**குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும்**
**பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை**
**2018 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகார சபையின்**
**பாதுகாப்பு நிதியத்தினது வருமான செலவின கூற்று**

| **விபரம்** | **மொத்தம் (ரூ.)** |
|---|---|
| **<u>நீதிமன்றங்களின் மூலமாக கிடைத்துள்ள வருமானங்கள்</u>**<br><br>மொத்த தண்டப் பணங்கள் | 555,800 |
| **முழு மொத்தம் (அ)** | **555,800** |
| **கூட்டுக: வட்டி வருமானம்** | - |
| **மொத்த வட்டி (ஆ)** | **-** |
| **கழிக்குக: செலவு** | - |
| **முழு மொத்த செலவு (இ)** | **-** |
| | |
| **தேறிய சேமிப்பு (அ) + (ஆ) + (இ)** | **555,800** |

**குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை**

**ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான செலவுகள் அடங்கிய அறிக்கை**

**காலம்: 2018.01.01 முதல் 2018.12.31 ஆம் திகதி வரை**

| **வருடாந்த இலக்குகள் அடங்கலாக எதிர்பார்த்த பலன்களும் சுட்டிகளும்** | **திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள்** குறித்த பலன்களை அடைந்து கொள்ளும் நிமித்தம் ஆண்டு முழுதிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் பட்டியல் | **திட்டமிடப்பட்டுள்ள வரவுசெலவு - 2018** | | **கொடுப்பனவுகளும் செலவுகளும் (ரூ.)** | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வரவுசெலவு பற்றிய விபரம் | தொகை | நிதி ரீதியாக செலுத்திய கொடுப்பனவுகள் | நிலையான சொத்துக்களின் மூலமாக செலுத்திய கொடுப்பனவுகள் | செலவுகள் | எஞ்சியிருக்கும் தொகை |
| | **<u>நடத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்</u>** | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| | குற்றத்தால் பலியானவர்களினதும் சாட்சியாளர்களினதும் உதவிக்கும் பாதுகாப்புக்குமான பிரிவின் உத்தியோகத்தர்களுக்கான விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் (குறித்த சட்டத்தின் 13 (இ) பிரிவு | | 1,531,000 | 765,000 | - | - | 765,000 |
| | குறித்த சட்டத்தை அமுல்படுத்தி செயற்படுத்துவது தொடர்பாக இலங்கை நீதிபதிகளின் சங்கம், பொலிஸ் மாஅதிபர் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை சட்டத்தரனிகள் சங்கம், சிறைச்சாலைகள் திணைக்களம், மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சு, சட்டமும் சமாதனமும் பற்றிய அமைச்சு, நீதி அமைச்சு, சட்ட உதவி ஆணைக்குழு முதலியவற்றிலுள்ள உரிய அதிகாரிகளுக்கும் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரிகளுக்குமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் மற்றும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்தல் (குறித்த சட்டத்தின் 13 (இ) பிரிவு) | | 11,791,000 | 3,895,000 | - | 10,029,359 | 6,133,859 |
| | குற்றத்தால் பலியானவர்களும் சாட்சியாளர்களும் அவர்களுக்கான பாதுகாப்பை கோரும் நடைமுறை தொடர்பாகவும் மற்றும் குற்றத்தால் பலியானவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் இருக்கின்ற உரிமைகள் மற்றும் உரித்துக்கள் தொடர்பாகவும் இலத்திரனியல் மற்றும் அச்சீடு | | 11,595,000 | 5,000,000 | - | 8,676,039 | 3,676,039 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஊடகங்களின் ஊடாக பரந்த நெகிழ்தன்மை வாய்ந்த முறையில் பொது மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் (குறித்த சட்டத்தின் 13 (இ) பிரிவு) | | | | | | |
| | இந்த தேசிய அதிகார சபைக்கு தேவையான உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல், குற்றத்தால் பலியானவர்களினாலும் சாட்சியாளர்களினாலும் விடுக்கப்படும் வேண்டுகோள்கள் மற்றும் செய்யப்படும் முறைப்பாடுகள் ஆகியன தொடர்பான முன்னேற்றங்களை கண்காணிக்கும் நோக்கில் இந்த தேசிய அதிகார சபைக்கு தேவையான தானியக்க சம்பவங்கள் முகாமைத்துவ தரவுகள் களஞ்சிய வசதிகளை உருவாக்குதல், குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான ஒரு நூலகத்தையும் மற்றும் ஒரு ஆராய்ச்சி நிலையத்தையும் தாபித்தல் | | 15,083,000 | 12,000,000 | - | - | 12,000,000 |
| | இந்த அதிகார சபை சார்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பினது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | | | | 8,066,671 | 8,066,671 | |
| | **மொத்தத் தொகை** | | **40,000,000** | **21,660,500** | **8,066,671** | **26,772,069** | **2,955,102** |

எனது இல. JPA/B/NAPVCW/
FA/01/18/48(i)

திகதி :- 2019 யூன் 21

பணிப்பாளர் நாயகம்
குற்றங்கள் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை.

**குற்றங்கள் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

மீளாய்வாண்டின் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அச்சீட்டு மற்றும் இலத்திரனியல் ஊடகத்திற்கான தொடர்பாடல் கருவிகளை தயாரிப்பதற்காக அதிகாரசபைக்கும் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்ட ரூபா 8,676,039 முற்பணம் நிதிக்கூற்றுக்களில் முற்பணமொன்றாக காட்டப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 8,676,039 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும்

விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபையின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்கொன்றாகும்.

அதிகாரசபை நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக அதிகாரசபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவகத்தினால் பேணப்பட்டிருப்பதாகவும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது எனவும்

பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் ஆளுகை சபை உறுப்பினர் நிறுவகத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்புட்டுள்ளதாக

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை

| சட்டங்கள், விதிகள் / ஏற்பாடுகளுடனான தொடர்பு | விபரங்கள் |
|---|---|
| 2018 நவம்பர் 28 இல் அதிகாரசபைக்கும் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட வேலைகள் மற்றும் சேவைகள் உடன்படிக்கையின் 05 ஆம் பிரிவு | பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் - 2018 தொடர்பான அச்சீட்டு மற்றும் இலத்திரனியல் ஊடகத்திற்காக தொடர்பாடல் கருவிகளை தயாரிக்கும் செயற்பாட்டிற்காக உடன்படிக்கையின் பிரகாரம் தயாரிப்புக்களை கையேற்கப்பதற்கு |

முன்னர் ரூபா 8,676,039 தொகை முழுமையாக செலுத்தப்பட்டிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபை அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்தியிருக்கவில்லையெனவும்

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பெறுகைத்திட்டத்தின் பிரகாரம் 05 வளிப்பதனாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பெறுகைத் திட்டத்திலிருந்து விலகி ரூபா 540,000 பெறுமதியில் 06 வளிப்பதனாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இன்னொரு வளிப்பதனாக்கியை கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பெறுகை திட்டத்தை தயாரித்த போது ஒரு வளிப்பதனாக்கி ரூபா 310,000 ஆக இருக்க வேண்டுமென மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூறுவிலைகள் கோரப்பட்ட போது அனைத்து நிறுவனங்களும் ரூபா 100,000 இற்கு குறைவான விலைமனுக்களையே சமர்ப்பித்திருந்தன. அதிகாரசபை மதிப்பீடுகளை தயாரிக்கும் போது மிகையாக தயாரித்திருந்தமையால் பாதீட்டை வினைத்திறனாக பயன்படுத்தியிருக்கவில்லை. வளிப்பதனாக்கிகளை கொள்வனவு செய்யும் போது விவரக்குறிப்புக்கள் முறையாக தயாரிக்கப்படாததன் காரணமாக கொள்வனவுக் கிரயத்திற்கு புறம்பாக நிறுவுவதற்காக ரூபா 105,050 மேலதிக கிரயத்தை செலவிட நேர்ந்தது.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) 2018 சனவரி 01 தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான அதிகாரசபையின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவிற்கு பொதுமக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களால் அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 86 ஆக காணப்பட்டன. மீளாய்வாண்டின் போது 23 முறைப்பாடுகள் அதிகாரசபையால் புலனாய்வு செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்த அதே நேரம் 38 முறைப்பாடுகள் புலனாய்வு செய்யப்பட்டு வந்தன. 19 முறைப்பாடுகள் மூடப்பட்டு அல்லது ஏனைய நிறுவனங்களிற்கு அனுப்பப்பட்டு இருந்தன. 5 முறைப்பாடுகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததுடன் 4 முறைப்பாடுகள் தனியாக வைக்கப்பட்டிருந்தன. அதிகாரசபை இதுவரை பாதுகாப்பு பிரிவு ஒன்றையோ அல்லது உதவி பிரிவொன்றையோ ஸ்தாபித்திருக்கவில்லை. ஆகையால் அதிகாரசபையால் பெறப்பட்ட முறைப்பாடுகளில் 30 முறைப்பாடுகள் அல்லது 35 சதவீதம் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பு பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) போது அதிகாரசபை நடாத்திச்செல்லப்படும் கட்டிடம் நீதி அமைச்சிற்கு சொந்தமான காணப்படுவதுடன் அதன் மின்சாரம் மற்றும் நீர் போன்ற பகராமரிப்புச் செலவினங்கள் நீதி அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதிகாரசபைக்கு முறையாக

கையளிக்கப்பட்டிருக்காத கட்டிடத்தின் உள்ளக பகுதிகளை பிரிவுகளாக வேறாக்குவதற்காக ரூபா 1,991,278 தொகை அதிகாரசபை செலவிட்டிருந்தது. அம் மூலதன செலவினத்தின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய நன்மைகளை அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முறையான உறுதிப்படுத்தலொன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) கீழ் அதிகாரசபையால் பெறப்பட்ட ரூபா 410,363 பெறுமதியான நிழற்படப் பிரதி இயந்திரம் மற்றும் அச்சிட்டு இயந்திரம் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஈ) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 54 ஆக காணப்பட்ட போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையில் 31 பதவிகள் காணப்பட்டன. அதிகாரசபையில் உள்ள முக்கியமான 23 பதவிகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தற்போதும் வெற்றிடங்களாக காணப்படுகின்றன.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி